அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

# தொண்டகங்கள்

கையேடு



## வள்ளலார் அறநிலையம்

பெண்ணாடம்

# பெண்ணாடம்

# வள்ளலார் அறநிலையத் தொண்டகங்கள்

## கையேடு

வெளியீடு :
வள்ளலார் பெருநெறிப் பதிப்பகம்
வள்ளலார் அறநிலையம், பெண்ணாடம் - 606105
திட்டக்குடி வட்டம், கடலூர் மாவட்டம், தமிழ்நாடு.
தொலைபேசி எண் : 04143-222706,
செல்பேசி : 9788033666

மின்னஞ்சல் : vallalararanilayampdm@yahoo.com
Web : www.vallalarpennadam.com
வெளியீட்டு எண் : 11/ 2016

# தொண்டகங்கள் - ஒரு பார்வை

## முன்னுரை :

பெண்ணாடம் சன்மார்க்கச் சங்கம், தமிழகத்தின் பழமையான சன்மார்க்கச் சங்கங்களில் ஒன்றாகும். பெண்ணாடம் சன்மார்க்க அன்பர்கள், **"ஜீவகாருண்ய ஒழுக்கம்"** என்ற சன்மார்க்க மறையை, பல ஆண்டுகளாகத் திரும்ப திரும்ப பயின்று ஆய்ந்ததின் பயனாகவும் வடலூர்ப்பெருவெளியில் இரவு முழுவதும் பல ஆண்டுகளாகச் செய்த சத்விசாரத்தின் விளைவாகவும், வாய் படித்த தயவை கையும் செய்ய வேண்டும் என்ற விழைவில், **வள்ளலார் அறநிலையம்** என்ற தயவாலயத்தை பெண்ணாடத்தில் எழுப்பினார்கள். அறநிலையத்தின் முதன்மைப் பணியாக, வள்ளலார் மாணவர் இல்லம் என்ற தொண்டகம் துவக்கப்பட்டது. அதில், திக்கற்ற ஏழைக்குழந்தைகள், இலவசமாக உணவு, உடை, உறையுள், கல்வி, ஒழுக்கம் ஆகியன பெற்று வருகிறார்கள். இதில் பயின்ற பிள்ளைகள் பொறியியல் கல்வி பெற்றும் சிலர் கடல் கடந்து சென்று பணியாற்றுங் கண்ணும் அறநிலையத்தோடு நன்றியோடு தொடர்பு பாராட்டும் நிலையிலும் இருக்கிறார்கள்.

அறநிலையத்தின் இரண்டாவது பணியாக, வள்ளலார் முதியோர் வாழ்வகம் துவக்கப்பெற்று, அதில் வாழ்வின் எல்லைக்கு வந்துவிட்ட முதியோர்கள், மன அமைதியாக வாழ்ந்து வருகிறார்கள்.

மூன்றாவதாக வளர்ந்த தொண்டகம்தான் வள்ளலார் சமுதாயச் சரகம் என்ற அமைப்பு ஆகும். இதில் பள்ளி இறுதி வகுப்பில் நல்ல மதிப்பெண் பெற்றும் பொருளாதார வசதி பற்றாமையால் கல்லூரியில் கல்வியைத் தொடர இயலாத மாணவர்களுக்கு, பொறியியல் படிப்பின் முழுச் செலவையும்

இச்சரகம் ஏற்று அவர்கள் பொறியியல் கல்வியை முடிக்கவும் அவர்கள் ஒரு பணியில் அமரவும் வழிகோலுகிறது. இதன் மூலம் இதுவரை 9க்கும் மேலான மாணவர்கள் இன்று பொறியியல் வல்லுனராகி பணியமர்ந்து இருக்கிறார்கள். இந்தத் தொண்டகங்களோடு, வள்ளலார் மூலிகை முற்றம், வள்ளலார் சாதனாச் சாலை, வள்ளலார் ஞான நூலகம், வள்ளலார் பிரச்சாரப் பேரவை போன்ற **மொத்தம் 16 தொண்டகங்கள்** உருவாக்கப் பெற்றன.

**வள்ளலார் அறநிலையம் இன்று, 25 ஆண்டுகள் நிறைந்து, வெள்ளி விழாக் கொண்டாடி பொலிந்து நிற்கிறது.** இந்த வேளையில், அறநிலையம் இன்னும் பலத் தொண்டகங்களில் காலூன்றி, அதன்மூலம் வெளி உலகார் பலர் அறநிலையத்தோடு இணைந்து, அணைந்து தொண்டாற்ற வழிகோல வேண்டும் என்ற வேணவா எமக்கு எழுந்து, குடத்திற்குள் இட்ட விளக்காக இருக்கும் இன்றைய அறநிலையப் பணிகள் குவலயம் எங்கும் விரிய வேண்டும் என்ற பெருவிழைவும் விளைந்தது. இந்த சிந்தனை எழுச்சியன் **வெளிப்பாடாக, 16 ஆக இருந்த தொண்டகங்கள் 28 ஆக இன்று விரிந்து இருக்கின்றன.** இது இன்னும் வரும் நாட்களில் மேலும் விரிவடைய வேண்டும் என்பது எமது பிரார்த்தனை. அதற்குத் தேவை இரண்டு. ஒன்று பெருமானின் பெருங்கருணை; மற்றொன்று தொண்டாற்றும் திருஉளங்கொண்ட பெருமக்கள். கடந்த 26 ஆண்டுகளில் எமது அனுபவம் என்னவெனில், கருணை உளம்படைத்தோர் உலகில் பலர் உள்ளனர்; ஆனால் அவர்களின் கருணைக்குச் செயலுருவம் கொடுக்க ஒரு தூய்மையான – நேர்மையான – ஒரு அமைப்புத் தேவை என்பதுதான். **இதற்காக பெண்ணாடம் வள்ளலார் அறநிலையம் என்றும் அணியாமாக இருக்கிறது.**

## தொண்டகங்கள் :

பெண்ணாடம் வள்ளலார் அறநிலையம் மேற்கொண்டுள்ள இன்றைய 28 தொண்டகங்கள் வருமாறு :


| எண் | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | வள்ளலார் மாணவர் இல்லம் | 1 |
| 2 | வள்ளலார் முதியோர் வாழ்வகம் | 5 |
| 3 | வள்ளலார் சமுதாயச் சரகம் | 8 |
| 4 | வள்ளலார் மூலிகை முற்றம் | 10 |
| 5 | வள்ளலார் நன்னெறிப் பயிலகம் | 12 |
| 6 | வள்ளலார் ஞான நூலகம் | 14 |
| 7 | வள்ளலார் தொழிற்பயிற்சி மையம் | 16 |
| 8 | வள்ளலார் சாதனாச் சாலை | 18 |
| 9 | வள்ளலார் கல்விக் கழகம் | 20 |
| 10 | வள்ளலார் கருணைச் சோலை | 22 |
| 11 | வள்ளலார் வருவாய் வாரியம் | 24 |
| 12 | வள்ளலார் பிரச்சாரப் பேரவை | 25 |
| 13 | வள்ளலார் பெருநெறிப் பதிப்பகம் | 27 |
| 14 | வள்ளலார் சன்மார்க்க ஆய்வரங்கம் | 29 |

| எண் | தலைப்பு | பக்கம் எண் |
| --- | --- | --- |
| 15 | வள்ளலார் வாழ்வியல் வலைத்தளம் | 36 |
| 16 | வள்ளலார் மக்கள் தொடர்பகம் | 38 |
| 17 | வள்ளலார் செந்தமிழ்ச் சங்கம் | 39 |
| 18 | வள்ளலார் மென்கலை மன்றம் | 43 |
| 19 | வள்ளலார் மகளிர் மாடம் | 44 |
| 20 | வள்ளலார் இளைஞர் இன்குழாம் | 46 |
| 21 | வள்ளலார் பசுமைக் காப்பகம் | 48 |
| 22 | வள்ளலார் மனிதவளச் சீராயம் | 52 |
| 23 | வள்ளலார் திருநாள் திருச்சபை | 54 |
| 24 | வள்ளலார் பன்னாட்டு முனையம் | 56 |
| 25 | வள்ளலார் சாதுக்கள் குடில் | 58 |
| 26 | வள்ளலார் சின்னம்மை சேவாலயம் | 60 |
| 27 | வள்ளலார் மாற்றுத்திறனாளிகள் மகிழ்வகம் | 62 |
| 28 | வள்ளலார் குழந்தைகள் குவலயம் | 63 |


மேற்கண்ட 28 தொண்டகங்களில், முதல் 24 தொண்டகங்கள் உடனடி செயல்பாட்டுத் திறத்தனவாகவும் பிந்தைய 4 தொண்டகங்கள் 2020 ஆம் ஆண்டை இலக்காகவும் கொண்டன. கருணை மனத்தார் மனக் கசிவு பெருக நேர்ந்தாலும், பெருமானின் திருஉளம் வாய்த்தாலும், இவை நான்கும் வெகுவிரைவில் செயலுருவம் கொள்ளவும் வாய்ப்பு உள்ளது.

தாளாளர்கள் :

வள்ளுவப் பெருந்தகை நிர்வாக இயலின் வித்தகர் ஆவார். ஒரு செயலை செய்வது எப்படி என்று கூறும் போது

"எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின்

எண்ணுவம் என்பது இழுக்கு"

என்பார்.

எனவே, இப்பணியைத் துவங்கும் முன்பு, பலமுறை எண்ணித் துணிந்தோம். அதே வேளையில், ஒரு செயலைப் பற்றி அதிகம் எண்ணும்போது, இயல்பாக ஒரு மலைப்புத் தோன்றும். அந்தசூழலில், வள்ளுவப் பெருந்தகை இப்படி ஒரு ஊக்கம் கொடுக்கிறார்;

"அருமை உடைத்து என்று அசாவாமை வேண்டும்;

பெருமை முயற்சி தரும்"

அதாவது, இதை செய்வது மிக கடினம் (அருமை) என்று, தளராமை (அசாவாமை) வேண்டும்; நாம் எடுக்கிற முயற்சியே நமக்கு அச்செயலில் வெற்றியையும் பெருமையையும் கொடுக்கும் என்கிறார். இது பெண்ணாடம் வள்ளலார் அறநிலையத் தொண்டகத் தாளாளர்களுக்காகவே வள்ளுவர் சொன்னதாகக் கொள்ள வேண்டுகிறோம். எடுக்கிற செயல் வெற்றி அடையவேண்டி, அச்செயலைச் செய்ய தகுதி வாய்ந்தவரை இனம் காணுதல் அடுத்து செய்யவேண்டியச் சீரியச் செயலாகும். வள்ளுவரே நமக்கு மீண்டும் துணை வருகிறார்.

“இதனை இதனால் இவன்முடிக்கும் என்று ஆய்ந்து

அதனை அவன்கண் விடல்”

என்பது வள்ளுவம்.

இந்தத் தொண்டகத்தை இவர் இவர்தான் இந்த வழியில் திறம்படச் செய்ய வல்லவர் என்று ஆய்ந்து, அந்தந்த தொண்டகத்தை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று வள்ளுவ நாயனார் மொழிந்தவாறு, தகுதி வாய்ந்தச் சான்றோர்களை அந்தந்த தொண்டகங்களுக்குத் தாளாளர்களாக தெரிவு செய்து அந்தப் பெருந்தகையாளர்களிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கின்றன. அறங்காவலர்களே அன்றி, இனி பலவேறு தாளாளர்களும் அறநிலையத்தாரோடு இணைந்து சமுதாயப் பணி ஆற்ற இருக்கிறார்கள். இன்னும் பலநூறுபேர் அறநிலையத்தோடு இணைய வேண்டும்; அதன் மூலம் வள்ளற்பெருமானின் கருணைநெறி உலகெங்கும் பரவவேண்டும். அதனால் எல்லா உயிர்களும் இன்புற்று வாழ வேண்டும் என்ற பிரார்த்தனையோடு அமைகிறோம். வந்தனம்.

**இங்ஙனம்,**

**வள்ளலார் அறநிலையத்தார்,**

**பெண்ணாடம்.**

# வள்ளலார் வாய்மொழி

“இப்போது ஆண்டவர் என்னை ஏறாத நிலைமேல் ஏற்றி இருக்கிறார். என்னை ஏறா நிலமிசை ஏற்றிவிட்டது யாதெனில் தயவு. தயவு என்னுங் கருணைதான் என்னை தூக்கிவிட்டது. அந்த தயவுக்கு ஒருமை வரவேண்டும். அந்த ஒருமை இருந்தால் தான் தயவு வரும். தயவு வந்தால் தான் பெரிய நிலைமேல் ஏறலாம். இப்போது என் அறிவு அண்டாண்டங்களுக்கு அப்பாலும் கடந்து இருக்கிறது. அது அந்த ஒருமையினால் வந்தது . நீங்களும் என்னைப்போல் ஒருமையுடனிருங்கள்”

(வள்ளர் பெருமானின் பேருபதேசப் பகுதி)



# 1 - வள்ளலார் மாணவர் இல்லம்

**நோக்கம் :** தாய் தந்தையற்ற அல்லது அவர்கள் இருந்தும் பராமரிக்க இயலாமல் விடப்பட்ட ஏழை இளம் மாணவர்களைத் தெரிவுசெய்து, அவர்கள் பள்ளி இறுதி வகுப்பு வரை படிக்க வைக்கவும் அவர்களுக்கு உணவு, உடை, உறையுள், ஒழுக்கம் ஆகியன இலவசமாக அளிப்பதும் இத்தொண்டகத்தின் நோக்கமாகும்.

## 1. மாணவர்களுக்குத் தனிக்கல்வி (Tution)

(அ) ஒன்றோ அதற்கு மேற்பட்ட ஆசிரியர்களையோ நியமிக்கலாம்.

(ஆ) தற்போதைய கல்வித்தரத்தை ஒரு தேர்வு மூலம் ஆய்ந்து தனிக்கல்வி ஆரம்பிப்பதற்கு முந்தைய கல்வி நிலையாகக் கொள்ளலாம். பின்பு மாதாந்திரத் தேர்வு நடத்திக் கல்வி மேம்பாட்டைக் கணிக்கலாம்.

## 2. மாணவர்கள் எண்ணிக்கை

சுற்று வட்டாரப் பள்ளிகளைத் தொடர்பு கொண்டு வசதியற்ற குழந்தைகளைத் தெரிவு செய்து, மாணவர்கள் எண்ணிக்கையை 25 ஆக பேணுதல் வேண்டும். தாய் தந்தையற்ற (அல்லது) இருவரில் ஒருவர் இல்லாத வெளிமாவட்டக் குழந்தைகளையும் சேர்க்கலாம்.

## 3. மாணவர்கள் ஒழுக்கம்

(அ) மாணவர்களுக்கான கால அட்டவணையை முழுமையாகச் செயல்படுத்துதல். குறிப்பாக, காலை துயிலெழல் கால அட்டவணைப்படி நிகழ்தல் வேண்டும். அறநிலைய காப்பாளர் பணியை இவைகளுக்குக் கோரலாம். (விடுமுறை நாட்களுக்குத் தனியே அட்டவணை அணியமாக்க வேண்டும். மாணவர்கள் சற்று ஓய்வு எடுக்கவும் விளையாடவும் காலம் தருதல் வேண்டும்.)

(ஆ) துவக்கக் காலத்தில், ஒரு வாரத்திற்குத் தொடர்ச்சியாக அதிகாலை-மாலை வந்து பழக்குதல் நலம். பின்பு ஏதாவது ஒரு நாளில், முன் அறிவிப்பின்றி வந்து ஆய்தல் நலம்.

(இ) மாணவர் இல்ல கால அட்டவணை, அலுவலகக் கோப்பில் உள்ளது.

## 4. மாணவர் இல்லத் தூய்மை மற்றும் ஒழுக்கங்கள் பேணுதல் - போதித்தல்

(அ) துணிமணிகள், புத்தகங்கள், பாய், போர்வை போன்றவைகளை அதற்குண்டான இடங்களில் அடுக்கி வைத்தல்.

(ஆ) தட்டு டம்ளர் போன்றவற்றை உணவக வைப்பறையில் உள்ள அதற்கான இடத்தில் வைத்தல்.

(இ) துணிகளைத் தினந்தோறும் காலையில் துவைத்து, மாலையில் அவற்றை மடித்து அடுக்கி வைத்தல்.

(ஈ) கிழிந்த துணிகளைத் தைத்தல், பொத்தான்கள் தைத்தல் ஆகியனவற்றைப் பழக்கலாம்.

(உ) விழாக்காலத் துணிகளை (2 இணைகள்-ஜோடிகள்) சலவை செய்து அலுவலகத்தில் பத்திரப்படுத்துதல்.

(ஊ) பள்ளிக்குப் போகும்போது சாலையோரத்தில் அமைதியாகச் செல்லுதல். அறநிலைய மாணவர்கள் என நடைஉடை பாவனையில் அறியப்பெறுதல் வேண்டும்.

(எ) மாணவர்கள் படித்தல், படுத்தல் முதலியவற்றிற்கு அறநிலையத்தில் இடங்களை ஒதுக்குதல்.

(ஏ) காலையில் எளிய உடற்பயிற்சி, மாலையில் எளிய தோட்ட வேலைகள் ஆகியவற்றைக் கட்டாயமாக்குதல். இதற்கு இல்லத்து முதிய மாணவனைத் தலைவனாகப் போடலாம்.

(ஐ) காலையில் அறநிலைய வளாகத்தைத் தினந்தோறும் பெருக்கித் தூய்மைசெய்ய, வளாகத்தைப் பல பாகங்களாகப் பிரித்து, ஒவ்வொரு பாகத்திற்கும் (இரண்டு பேர் கொண்ட சேரன், சோழன்.... போன்ற பெயருடைய) ஒவ்வொரு அணியை நிரந்தரமாக ஒதுக்கலாம். எந்த அணியின் இடம் தூய்மையற்றதாக உள்ளது என்பதைக் கணிக்க இது உதவும்.

நுழைவுச் சாலை, முதியோர் வாழ்வகம் போன்ற இடங்களை அறநிலையப் பெண் பணியாளர் மூலம் தினந்தோறும் கூட்டுதல் வேண்டும். இது அறநிலைய மேலாளர் மேற்பார்வையில் நிகழ்தல் வேண்டும்.

## 5. காலை மாலை வழிபாடு

(அ) காலை மாலை வழிபாடு, குறித்த காலத்தில் நடைபெறுதல் வேண்டும். வழிபாடு துவங்கும் காலத்திற்கு முன் வருகைப் பதிவேடு இரு வேளையும் மேலாளர் மூலம் எடுத்தல் வேண்டும். வராதவர்கள் மேல் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ) பாட்டுப் பாடும் திறன் அறிந்து ஆல்பா, பீட்டா, காமா என அணி பிரித்து, ஆல்பா அணியினர் பாட, பீட்டா அணியினர் இரு பாடல்களுக்கு இடையே மகா மந்திரம் மட்டும் சொல்ல, காமா அணியினர் மனதிற்குள் மட்டும் சொல்லிப் பழக வேண்டும்.

## 6. மாணவர் வெளிச்செல் கைஏடு

மாணவர்கள் வெளியே செல்லும் போதும், திரும்ப வரும்போதும் வெளிச்செல் கையேட்டில் நேரத்தைப் பதிந்து, வெளியே சென்ற காரணத்தையும் பதிதல் வேண்டும். இப்பணியை அறநிலைய மேலாளர் மேற்கொள்ளலாம். தாளாளர் அவர்கள் வரும் போதெல்லாம் இப்பதிவேட்டை கண்ணுற்று குறைபாடுகள் இருப்பின் அவற்றைத் தலைவர் அறிதலுக்குக் கொண்டு வரலாம். இப்பணி செவ்வனே நிறைவேற, அனைத்து அறங்காவலர்களும் இவர்களுக்குத் துணைநிற்க வேண்டப்படுகிறார்கள். மாணவர் இல்ல வளர்ச்சிதான் அறநிலைய வளர்ச்சி என்பதை அனைவரும் சிந்தையில் வாங்க வேண்டப்படுகிறார்கள்.

7. ஆதரவற்ற குழந்தைகள் அறநிலையத்தைச் சார்ந்து இருப்பதால், அறநிலையம் அவர்களை தாயுமாய் தந்தையுமாய்ப் பேணி வருகிறது. குழந்தைகள் உள்ளத்தில், சாதி, மத, நிற, ஏழ்மை வேறுபாடுகள் உதியா வண்ணம் அவர்களை ஒழுக்கச் சீலர்களாக வளர்த்தல் வேண்டும். வள்ளலார் மாணவர் இல்லம்தான், அறநியைத்தின் முதல் தொண்டகமாக அரும்பி, இன்று மற்ற 28 தொண்டகங்களுக்கும் மேலாக மலர்ந்து இருக்கிறது. இவ் உண்மையை, இத்தொண்டகத் தாளாளர் தன் மனம் மொழி மெய்களால் உள் வாங்கிடல் நனி நன்று.



# 2 - வள்ளலார் முதியோர் வாழ்வகம்

**நோக்கம்:** முதுமை, மனிதவாழ்வின் இறுதி அத்தியாயம். இது எல்லோருக்கும் சுகமானதாய், சுமையற்றதாய், பயமற்றதாய் இருப்பதில்லை. " கோழி மிதித்து குஞ்சுக்கு நோகுமா? " என்பார்கள். ஆனால் சிலர், குஞ்சு மிதித்து நொந்துபோன கோழிகளாய் ஆதரவற்று கைவிடப் படுகிறார்கள். அப்படிப்பட்ட முதியவர்களுக்கு உதவிக்கரம் நீட்டி, ஆதரவு முகம் காட்டி, இறுதி மூச்சுவரை அவர்களைக் காப்பாற்றுவதே இத்தொண்டகத்தின் நோக்கமாகும்.

**பணி செயல்வகை:**

1. அறங்காவலர் குழுவோடு இணைந்து, தகுதி வாய்ந்த முதியவர்களைத் தேர்வுசெய்து, அறநிலைய விதிமுறைகளுக்கு உட்பட்டு முதியோர் வாழ்வகத்தில் அவர்களைச் சேர்க்க வேண்டும்

2. வள்ளலார் முதியோர் வாழ்வகத்தின் ஒட்டு மொத்தப் பொறுப்பு தாளாளரைச் சாரும் என்பதால், கீழ்க் கண்ட பதிவேடுகளையும் படிவங்களையும் பேண வேண்டும்.

(அ) முதியோர் வாழ்வகத்தில் உறைவோருக்கான பதிவேடு ஒன்றைப் பேணுதல் வேண்டும். பேரேட்டில் வரவேண்டிய செய்திகள் அறநிலைய கோப்பில் உள்ளன.

(ஆ) ஒரு முதியவர் சேரும்போது ஒரு விண்ணப்பப் படிவத்தை நிரப்ப வேண்டும். இது அச்சுத்தாளிலோ கணினியிலோ அச்சிடப்பட்டதாக இருக்க வேண்டும். இதன் செய்தி அறநிலைய கோப்பில் உள்ளது.

(இ) முதியோர்கள் அறநிலையத்தைவிட்டு விலகும்போதும் ஒரு விண்ணப்பத்தை அளிக்க வேண்டும். அதில் இருக்க வேண்டிய செய்திகள் அறநிலைய கோப்பில் உள்ளன.

(ஈ) முதியவர்கள் விடுமுறையில் வெளியே செல்லும்போதும் ஒரு பதிவேட்டில் பதிய வேண்டும். அதில் இருக்க வேண்டிய செய்திகள் அறநிலைய கோப்பில் உள்ளன.

(உ) முதியோர்கள் இரண்டு வேளையும் அறநிலைய சிற்சபா மாடத்து வழிபாட்டில் கலந்து கொள்ள வேண்டும். அதற்காக அங்குள்ள வருகைப் பதிவேட்டில் பதிய வேண்டும்.

(ஊ) முதிவர்கள் வெளியே செல்லும்போதும் வெளிச்செல் கையேட்டின் வெளிச்செல்லும் தேதி நேரம் திரும்பி வந்த நேரம் ஆகியன குறிப்பிட்டு கையொப்பமிட வேண்டும்.

(எ) முதியோர் வாழ்வக தொலைக்காட்சிப் பெட்டி இயங்க காலம் நிர்ணயம் செய்து (எடுத்துக்காட்டாக காலை 2 மணி நேரம் மாலை 3 மணி நேரம் போல) அதைத் தொலைக்காட்சிப் பெட்டியருகே அறிவிப்பாகத் தொங்கவிட வேண்டும்.

(ஏ) முதியோர் வாழ்வகத்தின் தங்குவோரின் மாதாந்திர பண நன்கொடையை இணைப்பொருளாளர் மூலம், மாதந்தோறும்

- கணக்குப் பார்த்து பணம் செலுத்தாதவர்க்கு பணம் செலுத்த வழிவகை செய்யவேண்டும் அல்லது அவர்களை வாழ்வகத்திலிருந்து விடுவிக்க வேண்டும்.

(ஐ) அறநிலையப் பெண் பணியாளர் மூலம் காலை மாலை இரண்டு வேளையும் முதியோர் வாழ்வகத்தைப் பெருக்குதல் வேண்டும்.

(ஒ) மு.வாழ்வகத்தை தூய்மையாக வைத்துக்கொள்ள முதியோர்களுக்கு அவ்வப்போது பயிற்சி அளிக்க வேண்டும்.

(ஓ) அறநிலையத்தில் அளிக்கப்படும் உணவைத் தவிற வேறு எந்த வெளி உணவும் உள்ளே கொண்டுவர முதியோர்களுக்கு அனுமதி இல்லை. மீறுபவர்களை ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்த வேண்டும்.

(ஔ) முதியோர் வாழ்வகத்தில் உறைவோருக்கான விதிமுறைகளை அணியம் செய்து, தலைவர் ஒப்புதல் பெற்றபின், அதைக் கணினியில் பதாகையாகச் செய்து முதியோர் வாழ்வகத்தில் தொங்கவிடவேண்டும்.



# 3 - வள்ளலார் சமுதாயச் சரகம்

**நோக்கம்:** உடலுக்குக் கண் எவ்வளவு முக்கியமோ அத்தனை முக்கியம் ஒரு மனிதனுக்குக் கல்வி ஆகும். அந்தக் கல்வியைக் கற்பதற்குப் பொருளாதார இயலாமை, ஒரு தடையாக வருவது ஒரு சமுதாய இழிவு என்பதை உணர்ந்து, மேற்படிப்புக் கல்வியைத் தொடர இயலாத தகுதிவாய்ந்த மாணவர்களைத் தெரிவு செய்து, அவர்கள் கல்வியைத் தொடரத் துணைவருவதே இத்தொண்டகத்தின் நோக்கமாகும். மேற்படிப்புவரை கல்வியை இலவசமாக வள்ளலார் மாணவர் இல்லம் அளிக்கிறது.

**செயல் வகை:**

1. ஏழைப் பிள்ளைகளின் மேற்கல்வி கற்க, தாம் ஈட்டிய பொருளில் ஒரு பகுதியை இப்பணிக்கு உதவ முன் வருவாரின் நன்கொடைகளைப் பெற்று வள்ளலார் அறநிலையத்தின் கணக்கில் தனியே வரவு வைத்து, இத்தொண்டகத்தைப் பராமரித்தல்.

2. பள்ளி இறுதி வகுப்பில் நல்ல மதிப்பெண்கள் பெற்று தொழிற்படிப்பு வகைகளைப் படிக்க இயலாத மாணவர்கள் அறநிலையத்தை அணுகும் போது, அறநிலைய விதிமுறைகளுக்கு உட்பட்டு நிதிநிலைமைக்கு ஏற்ப மாணவர்களை அறநிலையத்தார் துணையுடன் தெரிவு செய்தல்.

3. தெரிவு செய்யப்பட்ட மாணவர்களிடம் அரசு பத்திரத்தாளில், கல்வி முடித்தபின் பணிக்குச் செல்லும் காலத்தில், எளிய தவணை முறையில் வட்டியின்றி அசலை மட்டும் அறநிலையச் சமுதாயச் சரகத்திற்குத் திரும்ப அளிப்பதாக உறுதி வாங்கி அறநிலையம் மூலமாகக் கல்விச் செலவிற்குப் பணம் அளித்தல்

4. அறநிலையப் பொருளாளர் / இணைப் பொருளாளர் மூலம் அவ்வாறான பணங்கள் திரும்ப வருகின்றனவா எனக் கண்ணோட்டமிடுதல்.

5. வள்ளலார் சமுதாயச் சரகத்தின் துணையோடு கல்வி பயின்ற மாணவர்கள் பணி, இல்லறம் ஆகியனவற்றில் ஈடுபட்ட பின்பும், தன்னை இந்த நன்னிலைக்கு வர துணை புரிந்த அறநிலையத்தை என்றென்றும் நினைவில் கொண்டு, அறப்பணிகளில் ஈடுபாடு காட்டுதல் மனித நேயக் கடமையாகும். இதை இச் சரகத்தின் மூலமாகப் பயிலும் மாணவர்கள் உள்ளத்தில் ஊன்றுதல், தாளாளரின் கடமையாகிறது.

6. வள்ளலார் சமுதாயச் சரகத்தின் மூலமாக வேறு எந்தவிதமான பணிகள் ஆற்றிட முடியும் எனத் திட்டமிடுதல். இத்திட்டங்களை அறநிலையச் செயலாளர் / இணைச் செயலாளர் மூலம் தலைவர் அனுமதியுடன் செயலுருவம் கொடுத்தல்.

7. தமிழக தொழில் சம்பந்தமான கல்லூரிகளில், சமுதாயச் சரக மாணவர்கள் சேர்க்கைத் தொடர்பாக உதவி நாடுதல்.

8. அறநிலையத்தில் மூன்று மாதத்திற்கு ஒருமுறை நிகழும் தாளாளர் கலந்தாய்வு கூட்டத்தில் கலந்து கொண்டு தொண்டகங்கள் சிறக்கத் துணை நிற்றல்.

 

# 4 - வள்ளலார் மூலிகை முற்றம்

நோக்கம் : நமது அருளாளர்கள் பிறவி நோய்க்கு மட்டும் உய்வு சொல்லாமல், உடல் நோய்க்கும் உபாயம் சொன்னார்கள். “உடம்பார் அழியின் உயிரார் அழிவர்; திடம் பட மெய்ஞானஞ் சேரவும் மாட்டார் ” என்று சித்தர்களுக்கு எல்லாம் சித்தராகிய திருமூலர் நம்மை எச்சரிப்பார். நமது சித்தர்கள் வழியில், நமது வள்ளலார் இந்த உடலும் உயிரும் உய்யக் கூறியனவே சித்த மருத்துவம் எனும் மூலிகை மருத்துவம் ஆகும். அந்த மூலிகை மருத்துவத்தை ஊக்குவிப்பதே இத்தொண்டகத்தின் நோக்கமாகும்.

செய்முறை :

1. அறநிலையத்தின் ‘நந்தனக் காவு’ எனும் மூலிகைத் தோட்டத்தில், பெருமான் சொன்ன உயரிய மூலிகைகளைப் பயிராக்கி, உயரிய மூலிகைகளைச் சன்மார்க்க சாதகர்களுக்கும் ஏனைய எளிய மக்களுக்கும் வழங்குதல் வேண்டும்.

2. நமது அறநிலையத்தைச் சார்ந்த அனைவரும் ஞானமூலிகைத் தூளைத் தினந்தோறும் உட்கொள்ள வழிவகை செய்ய வேண்டும்.

3. வள்ளலார் மக்கள் தொடர்பகம் மூலமாக ஆண்டுக்கு மூன்று முறைக்கு குறையாமல் மூலிகை மருத்துவ முகாம்கள் நடத்தி எளியவர் நோய் நீக்கப் பாடுபட வேண்டும்.

4. வள்ளலார் சாதனா சாலை நிகழ்த்தும் வாழ்க்கைப் பயிற்சி முகாம்களின்போது, மூலிகைகள் பயன்பட உதவ வேண்டும்.

5. தமிழகத்தின் தலையாய இயற்கை மருத்துவ நிபுணர்களை அழைத்துவந்து அவர்கள் வழிகாட்டுதலில், இயற்கையோடு இயைந்த வாழ்வுமுறையை ஊக்க வேண்டும்.

6. இன்று, ஆங்கில மருத்துவமே அன்றி, ஆயுர்வேதம், யுனாணி, இயற்கை மருத்துவம் போன்றவையும் நம் பழமை மருத்துவத்தை வலியுறுத்துவனவாக உள்ளன. அவைகளையும் சீர்தூக்கி, மூலிகை மருத்துவத்திற்கு துணை செயல் வேண்டும்.

7. மூலிகை மருத்துவத்தோடு, நம் பெரியோர்கள் வலியுறுத்திய எளியச், சீறிய வாழ்க்கை முறை (Life Style) உடல், உள்ளம், ஆன்மா மூன்றிற்குமான ஒழுக்கப் பயிற்சி முறை ஆகியவற்றையும் வள்ளலார் சாதனாச் சாலையோடு இணைந்து பணியாற்றல் நலம்.

8. இயற்கை வாழ்வோடு, இணைந்து செயற்கை வாழ்விலிருந்து சிறிது சிறிதாக வெளிவர பாடுபட வெண்டும்.

9. ஒவ்வோராண்டும் ஏப்ரல் முதல் மார்ச் மாதம் வரையிலான காலத்திற்கு உண்டான செயல்பாடுகளைப் பட்டியலிட்டு, அவற்றைச் செயலர் / இணைச் செயலர் மூலமாகத் தலைவர் அனுமதி பெற்று செயலுருவம் கொடுக்க வேண்டும்.

10. அறநிலையத்தில் மூன்று மாதத்திற்கு ஒருமுறை நிகழும் தாளாளர்கள் கலந்தாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு தொண்டகம் சிறக்கத் துணை நிற்றல் வேண்டும்.



# 5 - வள்ளலார் நன்னெறி பயிலகம்

**நோக்கம்:** “சாகாக் கல்வியே கல்வி” என்பார் வள்ளற்பெருமான். அந்தக் கல்வியின்பால் செல்வதற்கு ஏதுவாக, உலகியல் கல்வியில் அருளியலையும் சேர்த்துக் கற்பது தேவையாகிறது. இன்று இந்தியாவின் பலமே , அதிக இளைஞர்களை கொண்ட ஒரே நாடு என்பதுதான். அந்த இளைஞர்கள் நல்லொழுக்கம் உள்ளவர்களாக வளர்ந்தால்தான் அந்த பலத்தின் பயனைப் பெற முடியும், இன்றைய அறிவியல் வளர்ச்சியின் அசுர வேகத்தில், மாணவர்கள் ஒழுக்கங்கள் பற்றியக் கவனம் பின்னோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது. இது அவசரமாக, அவசியமாக நம் கல்வி நிறுவனங்கள் சிந்திக்க வேண்டிய ஒரு கருத்தாகும். நல்லொழுக்கமாணவர்களை மாநிலத்திற்கு கொடுப்பது நம் கல்வி நிறுவனங்களின் தலையாய கடமையாகிறது. இந்தத் தேவையை ஈடுகட்ட வருவதே இத்தொண்டகத்தின் நோக்கமாகும்.

**செயல்வகை:**

1. “இளமையிற்கல்” என்றாள் ஔவை. அதிலும் நல்லொழுக்கங்களை இளமையில் தவறாது கற்க வேண்டும். இதைக் கருத்தில் கொண்டு பள்ளிகள் தோறும் வள்ளலாரின் கருத்துக்களை பாடங்கள் வழி கொண்டு சென்று, மாணவர்களை வள்ளலாரின் கருத்துக்கள்பால் ஆர்வம் கொளச்செய்து ஊக்குவித்தல், அதற்கான பாடப் புத்தகங்களை வடலூர்

“வெற்றி” நிலையம் மூலமாகப் பெறுதல் வேண்டும். இதற்குண்டான செலவினங்களை அறநிலையம் மேற்கொள்ளும்.

2. பள்ளிகளே அன்றி மேற்படிப்பு மாணவர்களுக்கும் வள்ளலார் கருத்துக்களை பாடதிட்டங்கள் மூலமாகவோ வினாடி வினா போன்ற நிகழ்வுகள் மூலமாகவோ கொண்டு செல்லுதல்.

3. ஆண்டு தோறும், பள்ளிப்பிள்ளைகளுக்கு அருட்பா பேச்சுப்போட்டி, பாடல் ஒப்புவித்தல், அருட்பா பாடல், நாட்டியம், நாடகம் போன்றவை நிகழ்த்தி பரிசுகள் அளித்து ஊக்குவித்தல்.

4. மாணவச் செல்வங்களுக்கு, வள்ளலார் மென்கலை மன்றத்தின் மூலமாக, இயல், இசை, நாடகப் பயிற்சியும், வள்ளலார் செந்தமிழ்ச் சங்கத்தின் மூலம் தமிழ் அறிஞர் பெருமக்களின் தீந்தமிழ்ச் சொற்பொழிவுகளையும், வள்ளலார் பெருநெறிப் பயிலகத்தின் மூலம் ஆத்திச்சூடி போன்ற அருந்தமிழ் நூல்களை அளித்தலையும், வள்ளலார் இளைஞர் இன்குழாம் மூலமாக மாணவர்களுக்கு சமுதாயத் தொண்டு பயிற்சியையும் அளிக்க வேண்டும்.

5. வள்ளலார் நன்னெறி பயிலகத்தின் வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கிப் பட்டியலிட வேண்டும். ஏப்ரல் முதல் மார்ச் வரையிலான காலத்திற்கான ஆண்டுத் திட்டத்தை அறநிலையச் செயலர் அல்லது இணைச் செயலர் துணையோடு தலைவர் அனுமதி பெற்று இத்திட்டங்களுக்குச் செயலுருவம் கொடுத்தல்.

6. அறநிலையத்தில் மூன்று மாதத்திற்கு ஒருமுறை நிகழும் தாளாளர்கள் கலந்தாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு தொண்டகம் சிறக்கத் துணை நிற்றல்.




# 6 - வள்ளலார் ஞான நூலகம்

**நோக்கம்:** நல்லொழுக்கம் நாட்டில் பரவ, நல்ல நூல்கள் நற்றுணையாக வரல் வேண்டும். அதற்கு, ஆன்மீக நூல்களும் அறநெறி பற்றி அறியத் துணையாக அமைகின்றன. இளைஞர்கள் முதல் முதியோர்கள் வரை யாவரும் ஞான நூல்களை – அறநூல்களை – நன்னெறி நூல்களை நாளும் படிக்க வேண்டும், இவை எல்லாம் சமுதாயத்தில் நல்லொழுக்கம் வளர, வளமான துணையாக நிற்க வேண்டும் என்பது இந்தத் தொண்டகத்தின் நோக்கமாகும்.

**பணிச்செயல் வகை:**

1. ஞான நூலகத்தில் சன்மார்க்கம், பொது ஆன்மீகம், இலக்கியம், அறிவியல் உடல்நலம் மற்றும் இளைஞர் நூல்களைப் பலநூறு பெருக்கத் திட்டமிடல் வேண்டும். அறநிலையம் இதற்குத் தகுந்த துணை செய்யும். இன்று ஞான நூலகத்தில் பலநூறு புத்தகங்கள் உள்ளன.

2. துவக்கமாக, குறைந்த பட்சம் 500 அன்பர்களையாவது நூலகச் செவ்விய உறுப்பினர்களாகச் சேர்க்கலாம். உறுப்பினர்களுக்கு அறநிலையம் நிர்ணயிக்கும் ஒரு சிறிய நூலக நுழைவுத் தொகையையும் திரும்பித்தரத் தக்க ஒரு நூல் காப்புத் தொகையையும் உறுப்பினர்களிடமிருந்து பெறலாம். இதைத் தவிர நூலக உறுப்பினர்களுக்கு வேறு எந்தத் தொகையும் இருக்க வேண்டுவதில்லை.

3. இல்லங்கள் தோறும் நூல்களின் பட்டியலைக் கொடுத்து நூல்களை வீட்டிற்கு எடுத்துச் சென்று படித்திடத் தூண்ட வேண்டும். இதற்கான வழிமுறை ஏதுக்களைச் சிந்திக்க வேண்டும்.

4. ஒரு மூன்று சக்கர மிதிவண்டியில், நடமாடும் நூலகம் ஒன்று அறநிலையத்தில் அணியமாக உள்ளது. இது குறிப்பிட்ட நாளில், வீடுகள்தோறும் சென்று, ஞான நூல்களை பெண்ணாடத்து இல்லத்தார்கள் படிக்க ஏதுசெய்யும். பின்பு ஆர்வம் மிகுகிறபோது, அவர்கள் அறநிலைய ஞான நுலகம் வந்து மற்ற நூல்களைப் படிக்க தூண்டப் பெறலாம்.

5. அறநிலையம் நியமிக்கும் நூலகர் வழி, ஆண்டிற்கு இருமுறை நூல்கள் கணக்கெடுப்பு செய்தல் வேண்டும்.

6. நூலகர் மூலம் தேவையான நூலகப் பதிவேடுகளைப் பேணுதல் வேண்டும்.

7. ஆன்மீகம், சன்மார்க்கம், தமிழ் இலக்கியம் ஆகிய துறைகளில் முனைவர் பட்டம் வாங்க முயல்வோர் வரை அறநிலையம் வந்து ஞான நூலக நூல்கள் துணை நாடும் வகையில் ஞான நூலகப் புத்தகங்களின் தரமும் எண்ணிக்கையும் அமையும் பாங்கில் நம் திட்டங்கள் செயல்பட வேண்டும்.

8. ஏப்ரல் முதல் மார்ச் வரையிலான காலத்திற்கு, நூலக வளர்ச்சிக்குத் தகுந்த ஆலோசனைகளையும், திட்டங்களையும் வடிவமைத்தல் வேண்டும். பின்பு அறநிலையச் செயலர்/ இணைச் செயலர் மூலம் தலைவர் அனுமதியுடன் அவைகுறித்துச் செயலுருவம் கொடுக்க வேண்டும்.

9. மூன்று மாதத்திற்கு ஒருமுறை அறநிலையத்தில் நிகழும் தாளாளர்கள் கலந்தாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு தொண்டகப் பணி சிறக்க வழி வகை செய்ய வேண்டும்.

 

# 7 - வள்ளலார் தொழிற்பயிற்சி மையம்

**நோக்கம்:** வாழ்வில் முன்னேற ஏக்கம் இருந்தும் எந்த வழிகாட்டுதலும் இன்றி அல்லல் உறும் மக்களுக்கு ஏதாவது ஒரு தொழிலைச் சொல்லிக் கொடுத்து, அதன் மூலம் அவர்கள் வாழ்வு மலரத் துணை நிற்றலே, இந்தத் தொண்டகத்தின் நோக்கமாகும்.

**செயல் முறை:**

1. தொழிற் பயிற்சியை அறநிலைய வளாகத்திலோ அன்றிப் பிற இடங்களிலோ இயலும் வகையில் வழங்கலாம்.

2. எடுத்துக்காட்டாக, பெண்களுக்குத் தையற்பயிற்சி, கணினி, ஜாம் ஊறுகாய் வற்றல் போன்ற உணவு வகைகள் செய்யவும், கடைகளில் விற்கத்தக்க பொம்மைகள் செய்தல், சோப்பு, மெழுகுவத்தி போன்றன செய்யவும் பயிற்சி அளித்தல், ஆண்களுக்கு கணினி, மோட்டார் மற்றும் மின் சாதனம், ஊர்திகள் சீர்செய்தல் போன்றவற்றிலும், மின் அச்சு, லேத் போன்றவற்றில் பயிற்சி அளித்தல் ஆகியன செய்யலாம்.

3. பயிற்சிக்கு உண்டான செலவினங்களைப் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ செலவினங்களைப் பொறுத்து அறநிலையம் உதவலாம்.

4. அரசின் கிராமப் புறத்திற்கான தொழிற்பயிற்சித் திட்டங்களை தெரிவுசெய்து, அறநிலைய வளாகத்தில் அந்தப் பயிற்சிகளை ஏழைமக்களுக்கு வழங்கலாம்.

5. நமது பெண்ணாடம் வட்டாரத்தில் பல தொழிலகப் பயிற்சி நிலையங்கள் **(ITI)** உள்ளன. அதே வேளை, நமது வட்டாரத்தில் இரண்டு சிமெண்ட் ஆலைகளும், ஒரு சர்க்கரை ஆலையும் உள்ளது. இந்த ஆலைகளில் பணிபுரியும் பொறியாளர்களில் தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வலர்களை ஒரு குழுவாக அமைத்து, அவர்கள் மூலம் **(ITI)** மற்றும் **(Poly Tech.)** போன்ற நிறுவன மாணவர்களுக்கு சிறப்பு வகுப்புகள் எடுக்கலாம். இந்த மாணவர்களை ஆலைகளுக்கு அழைத்துச் சென்று இயந்திரங்களை காண வாய்ப்புக் கொடுக்கலாம். இது ஆண்டிற்கு ஒரு முறையாவது நிகழலாம்.

6. அறநிலைய வளாகத்தில், வள்ளலார் தொழிற்பயிற்சி மையத்தின் பயிற்சி காலங்களில் உருவாகும் பொருட்களுக்கு அறநிலையம் மூலப்பொருள் கொடுக்கும் பட்சத்தில், அவைகளை வள்ளலார் வருவாய் வாரியத்தின் மூலமாகச் சந்தைப் படுத்தலாம்.

7. வள்ளலார் தொழிற்பயிற்சி மையத்தின் ஆண்டுத் திட்டங்களைப் பட்டியலிட்டு அறநிலையச் செயலர் அல்லது இணைச் செயலர் மூலமாக தலைவர் முன் அனுமதி பெற்று செயலுருவம் கொடுத்தல்.

8. அறநிலையத்தில் மூன்று மாதத்திற்கு ஒருமுறை நிகழும் தாளாளர் கலந்தாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு தொண்டகம் சிறக்கத் துணை நிற்றல்.



# 8 - வள்ளலார் சாதனாச் சாலை

**நோக்கம்:** வள்ளலாரை பக்தியோடு மட்டும் துதிப்பவர் பலர்; வள்ளலாரை அருளாளராக மனதில் மட்டும் போற்றி அமைவோர் பலர்; ஆனால், அவர் வழியில் நடக்க முயல்வோர் சிலர் மட்டுமே. அவர் படத்தை மட்டும் வழிபடுவோர், அவர் பாடத்தையும் பின்பற்ற வேண்டும். அவர் பாதத்தை மட்டும் பிடிப்பவர்கள் அவர் பாதையையும் பிடிக்க வேண்டும். அதற்கான வழிமுறைகளில் பயிலத் துணைவரலே, இத்தொண்டகத்தின் நோக்கமாகும்.

**பணிச்செயல் வகை:**

1. வள்ளலாரின் வழியில் வாழ விரும்புவோர்க்காக, வாழ்க்கைப் பயிற்சி முகாம்களை அறநிலைய வளாகத்தில் நிகழ்த்துதல் வேண்டும்.

2. வாழ்க்கைப் பயிற்சி முகாம்களுக்கான வாழ்க்கை முறை, அதற்கான கால அட்டவணை, உணவு வகைகள் ஆகியன அறநிலையத்தில் அணியமாக உள்ளன. அதை ஊன்றி உணர்க.

3. அறநிலைய வளாகத்தில் தங்கிப் பயிற்சி எடுப்போருக்காக, குளியலறையுடன் இணைந்த சாதனாச்சாலை அணியமாக இருக்கிறது. சன்மார்க்கச் சாத்விக உணவுக்கும் உணவுச் சாலை உள்ளது. எளிய கட்டண அடிப்படையில் அன்பர்கள் சாதனாப் பயிற்சி பெறலாம்.

4. ஏற்கெனவே இம்முகாம்களை நடத்திய தமிழகச் சன்மார்க்கப் பெருந்தகைகளை முன் கூட்டியே வேண்டி, இம்முகாம்களை நெறிப்படுத்துமாறு வேண்டுதல் அவசியம் இவர்கள் நெறியாளர்கள் எனப்படுவர்.

5. ஆண்டிற்கு 3 முதல் 4 முகாம்களை திட்டமிடல் வேண்டும். தமிழகச் சன்மார்க்கச் சங்கங்களுக்குச் சுற்றறிக்கைகள் மூலம் அல்லது நேரிடைத் தொடர்பாலோ இது தொடர்பான செய்திகளை அறிவித்து, பங்கு பெறுவோர் எண்ணிக்கையை இறுதியாக்கி, நெறியாளர்கள் முன்இசைவுப் பெற்று, பின் அறநிலையச் செயலர் அல்லது இணைச் செயலர் மூலம் செயலுருவம் அளித்தல் வேண்டும்.

6. சன்மார்க்கப் பெருந்தகையாளர்களை கலந்து ஆலோசித்து வாழ்க்கைப் பயிற்சி முகாம்களுக்கான ஒழுகலாறுகளை அவ்வப்போது தேவைக்கு ஏற்ப புதுப்பிக்க வேண்டும்.

7. வாழ்க்கைப் பயிற்சி முகாம்களில் பயிற்சிப் பெற்ற சாதகர்களுக்கு, அடுத்த நிலையாக, பன்னீர் அகவைப் பகுப்பு முறைகளில் பயிலத் தூண்டுதல் வேண்டும். பன்னீர் அகவைப் பகுப்புச் செய்திகள் அறநிலைய அலுவலகத்திலோ அல்லது அறநிலைய வலைதளத்திலோ கண்ணுறலாம்.

8. வள்ளலார் சாதனாச் சாலையினர் ஏப்ரல் முதல் மார்ச் வரையிலான கால எல்லைக்கு உண்டான திட்டங்களை அருதியாக்கி, அவைகளை அறநிலையச் செயலர் அல்லது இணைச் செயலர் மூலமாக தலைவர் அனுமதி பெற்று அவைகளுக்குச் செயலுருவம் கொடுத்திடல் வேண்டும்.

9. அறநிலையத்தில் மூன்று மாதத்திற்கு ஒருமுறை நிகழும் ‘தாளாளர்கள் கலந்தாய்வு’க் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ள வேண்டும்.



# 9 - வள்ளலார் கல்விக் கழகம்

**நோக்கம்:** கல்லாதார் முகத்தில் இருக்கும் இரண்டு கண்களும் இரண்டு புண்களே என்பது வள்ளுவம். இந்தக் கல்வியை சமுதாயத்தின் எந்தத் தடையும் வராமல், மாணவச் செல்வங்கள் பெற வழிகோலுவதே இத்தொண்டகத்தின் நோக்கமாகும்.

**செயல்வகை:**

1. வள்ளலார் அறநிலையப் பயிலரங்க வளாகத்தில், தக்க ஆசிரியர் துணை கொண்டு, பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்குத், தனி வகுப்புகள் நிகழ்த்தி, அவர்கள் பள்ளித் தேர்வுகளில் சிறக்கத் துணை நிற்கலாம். துவக்க நிலையில், பள்ளி 10-ஆம் மற்றும் 12-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இவ் வகுப்புகளை அமைக்கலாம்.

2. 10-ஆம், 12ஆம் வகுப்பு மாணவர்கள் தேர்வு அச்சம் கொள்வது கண்கூடு. அவற்றைப் போக்க, இவ்வட்டார மாணவர்களை ஒன்று கூட்டி, வள்ளலார் மனிதவளச் சீராயம் மூலம் வல்லுனர்களை வரவழைத்து "வெற்றி நமதே" போன்ற தன்னம்பிக்கை முகாம்களை நடத்துதல்.

3. மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் சரளமாகப் பேச, தக்க ஆசிரியர்கள் மூலம் பயிற்சி அளிக்கலாம்.

4. பிறமொழிகளைக் குறிப்பாக, இந்தி போன்ற மொழிகளில் பயிற்சி அளிக்கலாம்.

5. 12-ஆம் வகுப்பு முடித்த பின்னர் “என்ன படிக்கலாம்” என்ற வழிமுறை முகாம்களை அமைக்கலாம்.

6. வள்ளலார் தொழிற்பயிற்சி மையத்தின் மூலம் மாணவர்களுக்கு கணிணிப் பயிற்சி அளிக்கலாம்.

7. மாணவர்கள் வெறும் ஏட்டுக் கல்வியில் மட்டும் சிறந்தால், இன்றைய போட்டி உலகில் வெல்ல முடியாது. எனவே அவர்கள்தம் ஆளுமையை வளர்க்கும் விதமாக, வள்ளலார் மனிதவளர்ச்சி சீராயம் மூலமாக இத்துறையின் வல்லுநர்களை வரவழைத்து, “ஆளுமை ஊக்கப் பயிற்சியை” ஆண்டுக்கு ஒரு முறையாவது நிகழ்த்த வேண்டும்.

8. மாணவர்கள் கல்வியை முடித்தபின், நேர்முகத் தேர்வுகளை எதிர்கொள்ள, தக்க பயிற்றுனர்கள் மூலம் நேர்முகத் தேர்வுப் பயிற்சி அளிக்க வேண்டும்.

9. ஒவ்வோராண்டும், ஏப்ரல் மாதம் முதல் மார்ச் வரையிலான காலத்திற்கு உண்டான செயல் திட்டங்களை உருவாக்கி, அவைகளை அறநிலையச் செயலர் / இணைச் செயலர் மூலம் தலைவர் அனுமதியுடன் செயல் உருவம் கொடுக்க வேண்டும்.

10. அறநிலையத்தில் மூன்று மாதத்திற்கு ஒருமுறை நிகழும் தாளாளர்கள் கலந்தாய்வு கூட்டத்தில் கலந்து கொண்டு தொண்டகம் சிறக்கத் துணைவரல் வேண்டும்.



# 10 - வள்ளலார் கருணைச் சோலை

**நோக்கம்** : "இரக்கமும் என் உயிரும் இரண்டு அல்ல, ஒன்றே" என்றும், "இரக்கம் ஒருவில் (நீங்கினால்) என் உயிரும் ஒருவும்" என்றும் உயிர் இரக்கத்தை வாழ்வாக்க வந்தவர்கள் நம் பெருமான். அந்த உயிர் இரக்கக் கொள்கையை உணவிலும், வாழ்விலும் கடைப்பிடிக்க வழிகாட்டுவதும், கொலை புலை தவிர்த்தலின் அடிப்படையை விளக்குதலும் இத்தொண்டகத்தின் நோக்கமாகும்.

**செயல்வகை** :

1. மனிதனுக்கு தாவர உணவு எவ்வளவு இன்றியமையாதது என்பதை வலியுறுத்த, விளக்கக் கூட்டங்கள், சொற்பொழிவுகள், துண்டு பிரசுரங்கள் அளித்தல் போன்றன செய்தல். இதற்கு வள்ளலார் பிரச்சாரப் பேரவையின் உதவியை நாடலாம்.
2. புலால் உணவின் தீமையையும் தாவர உணவின் பெருமையையும், கொலை புலை தவிர்த்தலின் அவசியத்தையும் விளக்கும் குற்றேடுகள் போன்றவற்றை வள்ளலார் பெருநெறிப் பதிப்பகத்தின் மூலம் விநியோகிக்கலாம்.
3. உயிர் இரக்கக் கொள்கைகளை, வள்ளலார் நன்னெறிப் பயிலகத்தின் மூலம் பள்ளிக் குழந்தைகளுக்கு எடுத்துச் செல்லுதல்.

4. உயிர்க்கொலை தவிர்த்தல் தொடர்பான கருத்துக்களைப் பதாகைகள் மூலம் பொது இடங்களில் வைத்தல்.

5. பலி நிகழும் இடங்களில் பிரச்சனை உண்டாகாத வகையில் அரசின் உதவியோடு, அது செய்வோர்களின் தாள் பணிந்து, பலியிடலுக்குப் பதிலாக பொங்கல் வைத்தல் போன்றவற்றை மாற்றாகச் செய்யுமாறு வேண்டலாம்.

6. உலகெங்கிலும் இன்று “அகில உலகச் சைவ உணவு கூட்டகம்” (International Vegetarian Congress ) அதிகமாகப் பரவி வருகிறது. வள்ளலார் வாழ்வியல் வலைத்தளம் மூலம் அந்த நிறுவனங்களோடு பங்கு கொண்டு,தாவர உணவுப் பரவலுக்குத் துணை நிற்கலாம்.

7. உணவை மிகச் சுவையோடு சமைப்பது எப்படி என்பதை விளக்க, வள்ளலார் மகளிர் மாடம் மூலம் சைவ உணவு சமையல் விளக்க முகாம்களை அமைக்கலாம்.

8. ஒவ்வோராண்டும் ஏப்ரல் மாதம் முதல் மார்ச் மாதம் வரையிலான காலத்திற்கு உண்டான செயல்திட்டங்களை உருவாக்கி, அவைகளை அறநிலையச் செயலர் / இணைச்செயலர் மூலம் தலைவரின் அனுமதியோடு செயலுருவம் கொடுக்க வேண்டும்.

9. அறநிலையத்தில் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நிகழும் தாளாளர்கள் கலந்தாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு, தொண்டகம் சிறக்க வழிகோல வேண்டும்.

# 11 - வள்ளலார் வருவாய் வாரியம்

**நோக்கம்** : அருள் இல்லார்க்கு அவ் உலகம் (வீட்டுப்பேறு) இல்லை; பொருள் இல்லார்க்கு இவ் உலகம் இல்லை என்பது வள்ளுவம். “செய்க பொருள்” என்றும் சொல்லுவார் வள்ளுவர். இது அறப்பணி ஆற்றும் அறநிலையத்திற்கும் பொருந்தும். பொருள் இருந்தால்தான் தயவுப் பணிகளையும் தடை இன்றி செய்ய இயலும் என்ற நோக்கில் அற நிலையத்திற்கு அறம் பிறழாது ஆகாறுகளைப் பெருக்குவது இத்தொண்டகத்தின் நோக்கமாகும்.

**செயல் முறை :**

1. அறநிலையத்தின் சிலபலத் தொண்டகங்களின் செயல்பாடுகள் மூலம் வெளிப்படும் பொருட்களை வருவாய் வாரியம் சந்தைப் படுத்தி அறநிலையத்திற்கு ஆகாறு ஆக்கலாம். எடுத்துக்காட்டாக, மூலிகை முற்றத்தின் மூலிகைப் பொருட்கள், தொழிற்பயிற்சி மையத்தில் வெளியாகும் பொருட்கள், பெருநெறிப் பதிப்பகத்தின் மூலமாக விற்பனைக்கு வரும் நூல்கள், சின்னம்மை சேவாலயத்தில் உறைவோரின் கைவினைப் பொருட்கள் போன்றனவற்றை சந்தை படுத்தப்படலாம்.

2. ஆயூர்வேதப் பொருட்களை ( வாழுங்கலை, பதஞ்சலி நிறுவனப் பொருட்கள்) முகாமையராக விளங்கிச் சந்தைப் படுத்தி ஆகாறு தேடலாம்.

3. அறநிலையத்தின் நந்தனக் காவில் விளையும் பொருட்களைச் சந்தைப் படுத்தலாம்.

4. அறநிலையத்திற்கு வருவாய் வருவதற்கான அறவழிக்கு உட்பட்ட மற்ற எல்லா ஏதுக்களையும் ஆய்ந்தெடுத்து செயல்படுத்தலாம்.

5. அறநிலையத்தில் மூன்று மாதத்திற்கு ஒருமுறை நிகழும் தாளாளர்கள் கலந்தாய்வுக் கூட்டத்தில் கலந்துகொண்டு தொண்டகம் சிறக்க வழிகோல வேண்டும்.



# 12 - வள்ளலார் பிரச்சாரப் பேரவை

**நோக்கம்** : "எப்பாரும் எப்பதமும் எங்கணும் நான் சென்றே, எந்தை நின் அருட் புகழை இயம்பியிடல் வேண்டும்" என்று வேண்டுவார் வள்ளற்பெருமான். பெருமான் அருள் நெறிக் கருத்துக்களைச் செல்லும் இடமெல்லாம் ஒல்லும் வகையால் பரப்புவதே இத்தொண்டகத்தின் நோக்கமாகும்.

**பணி செயல் வகை :**

1. தமிழகம் முழுவதும் நிகழும் சன்மார்க்க விழாக்களில் சன்மார்க்கப் பெருந்தகைகள் மூலம் சன்மார்க்கக் கருத்துக்களைச் சொற்பொழிவு மூலமாகவும் இசை நிகழ்ச்சிகள் மூலமாகவும் வில்லிசையின் மூலமாகவும் நாடகங்கள் மூலமாகவும் பரப்புதல்.

2. ஊர்களில் நிகழும் பலவேறு பொது விழாக்களில் நீர்ப்பந்தல் உணவுப் பந்தல்கள் போன்றன அமைத்து, அங்குச் சன்மார்க்கக் கருத்துக்கள் தாங்கிய பதாகைகள் வைத்தல்.

3. திருமண விழாக்கள் மற்றும் நீத்தார் நினைவு விழாக்களில் வள்ளலார் பெருநெறிப் பதிப்பகம் வெளியிடும் சன்மார்க்கக் கருத்துக்கள் தாங்கிய சிறு கைத்தாட்கள் / கை ஏடு ஆகியன வழங்குதல்.

4. வள்ளலார் அறநிலையத்தின் சார்பாக சன்மார்க்கச் சொற்பொழிவுகளை இயலும் இடங்களில் எல்லாம் செய்தல்.

5. வள்ளலார் அறநிலையத்தின் வள்ளலார் சன்மார்க்க ஆய்வரங்கம் மற்றும் பெருநெறிப் பதிப்பகம் ஆகிய தொண்டகங்களுக்குத் துணை நிற்றல்.

6. வள்ளலார் பிரச்சாரப் பேரவையின் வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கிப் பட்டியலிடல் வேண்டும். அறநிலையச் செயலர் அல்லது இணைச் செயலர் துணையோடு தலைவர் அனுமதியுடன் இத்திட்டங்களுக்குச் செயலுருவம் கொடுத்தல வேண்டும்.

6. அறநிலையத்தின் பிரச்சாரகர்கள், வெளி உலகிற்கு அறநிலையத்தைக் காட்டும் முகங்கள் ஆவார்கள். அவர்கள் வழங்கும் கருத்துக்கள், அறநிலையத்தின் அடிப்படைக் கருத்துக்கள் ஆகின்றன. அறநிலையம், கடந்த 26 ஆண்டுகளாய், வள்ளற்பெருமான் கருத்துக்களை ஆழமாக உள்வாங்கி சிந்திக்கிற நிறுவனமாகும். எனவே, இப்பிரச்சாரப் பேரவையின் பேச்சாளர்கள், வள்ளலார் சன்மார்க்க ஆய்வரங்கத்தின் சன்மார்க்க பகுப்புமுறை கையேட்டை ஆழ்ந்து பயிலுமாறு வேண்டப்படுகிறார்கள். இப்பயிலரங்கத்தில் பயின்றவர்களே, சொற்பொழிவாளர்களாக வருவது சாலச்சிறந்தது.

7. தமிழகம் மட்டுமே அல்லாது வெளி நாடுகளிலும் சன்மார்க்கக் கருத்துக்களை பரப்ப வேண்டும் என்பதால், பல பகுதிகளிலும் சன்மார்க்கச் சொற்பொழிவாளர்களை அடையாளம் கண்டு அவர்களை அறநிலையத்தார் துணையோடு தெரிவு செய்தல் வேண்டும். பின்பு அவர்கள் வள்ளலார் சன்மார்க்கப் பயிலகத்தில் பயின்று சிறப்படைதல் நலம் பயக்கும்.

8. அறநிலையத்தில் மூன்று மாதத்திற்கு ஒருமுறை நிகழும் தாளாளர்கள் கலந்தாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு தொண்டகங்கள் பணி சிறக்கத் துணை நிற்றல்.



# 13 - வள்ளலார் பெருநெறிப் பதிப்பகம்

**நோக்கம்** : "பெருநெறிப் பிடித்தொழுக வேண்டும்" என்பார் வள்ளற்பெருமான். அந்த பெருநெறிகளை, வள்ளற்பெருமான் வழங்கியவாறு தொகுத்து மின்னூடகம் வழியாகவும் அச்சு ஊடகம் வழியாகவும் ஆர்வலர்கள்பால் கொண்டு சேர்ப்பதே இந்த தொண்டகத்தின் நோக்கமாகும்.

**பணி செயல் வகை :**

1. இதுகாறும் அறநிலையத்தாரால் அச்சுவடிவில் வெளியிடப்பட்ட குற்றேடுகள், சிற்றேடுகள் மற்ற ஏடுகள் ஆகியவற்றை, தேவையான மாற்றங்களோடு மீண்டும் வெளியாக்கல் வேண்டும். இவைகளை, வள்ளலார் அருள்நெறி வலைதளம் (வஅநெவ) மூலம் மின்னணு ஊடக வழியிலும் வெளிக்கொணர வேண்டும்.

2. அவ்வப்போது சூழலுக்கு ஏற்றாற்போல், சில குற்றேடுகளை அச்சிட்டு இலவசமாக வெளியிடலாம். எடுத்துக்காட்டாக,

(அ) தைப்பூசத்திற்கு முந்தைய பூசத்தன்று "தைப்பூசத்திற்கு தயாராகுவோம்" என்ற குற்றேட்டை வடலூரில் வெளியிடலாம்.

(ஆ) தைப்பூசத்தன்று, "ஜோதி தரிசனம் கூறும் உண்மை என்ன?" என்ற குற்றேட்டை வடலூரில் வெளியிடலாம்.

(இ) கொடி நாளன்று, "கொடி நாள் சிந்தனை" என்ற கையேட்டை மேட்டுக்குப்பத்தில் வெளியிடலாம்.

(ஈ) தருமச்சாலை நாளன்று, "பசிப்போக்குவதின் பெருமை" என்ற குற்றேட்டை வடலூரில் வெளியிடலாம்.

(உ) மேட்டுக்குப்பத்தில், திருஅறை தரிசனத்தன்று "ஒளித் தேகம் என்றால் என்ன?" என்ற குற்றேட்டை வெளியிடலாம்.

(ஊ) நீத்தார் மற்றும் திருமண விழாக்களில் அவை சம்பந்தமான கருத்துக்கள் தாங்கிய சிற்றேடுகளை வள்ளலார் பிரச்சாரப்பேரவை மூலம் வெளியிடல்.

3. வள்ளலார் அறநிலைத்திற்கான ஒரு சஞ்சிகை (Magazine) யை வடிவமைத்து வெளியாக்கல். முதற்படியாக, அதை மின்னணு சஞ்சிகை (e - Magazine) யாக வெளியாக்கல். துவக்கக் காலத்தில் இதை காலாண்டு இதழாக வெளியாக்கலாம். எதிர்காலத்தில் அச்சுவடிவமாகவும் வெளியிடலாம்.

4. மற்ற தொண்டகங்களுக்கு உண்டான கைத்தாட்கள் போன்றன அவ்வப்போது வெளியாக்கல், அறநிலையத்து வேண்டுகோள்கள், தகவல் நூல் போன்றன வெளியாக்கலும் இத்தொண்டகத்தின் பணியாகும்.

5. வள்ளலார் பெருநெறிப் பதிப்பகத்தின் வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கிப் பட்டியலிடவேண்டும். இதை ஏப்ரல் முதல் மார்ச் வரையிலான காலத்திற்காக ஒவ்வொரு ஆண்டும் உருவாக்கி, செயலர் அல்லது இணைச் செயலர் மூலமாக தலைவர் அனுமதி பெற்று செயலுருவம் கொடுக்க வேண்டும்.

6. அறநிலையத்தில் மூன்று மாதத்திற்கு ஒருமுறை நிகழும் தாளாளர்கள் கலந்தாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு தொண்டகத்தின் பணிச் சிறக்கத் துணை நிற்க வேண்டும்.



# 14 - வள்ளலார் சன்மார்க்க ஆய்வரங்கம்

**நோக்கம்** : இறைவனை அடைதற்கு வழி இரண்டு என்பார் பெருமான். அவை, மெய்ப்பொருளை ஆய்ந்து அறிதலும் (சத்விசாரம்) கருணை வழி செயல்பாடும் (பரோபகாரமும்). இறைவனை “அறிவால் அறிந்து” என்று ஜீவகாருண்ய ஒழுக்கம் எனும் சன்மார்க்க மறையில் சொல்லுவார். “மாய்ந்தவர் மீட்டும் வருநெறி தந்திதை, “ஆய்ந்திடு” என்றுரைத்த அருட்பெருஞ்ஜோதி” என்று அகவலில் சிந்திக்கத் தூண்டுவார் நம் பெருமான். “துறை இது, வழி இது, துணிவு இது, நீ செய்யும் முறை இது எனவே மொழிந்த மெய்த்துணையே” என அதே அகவலில் நாம் சன்மார்க்கத்தில் முன்னேற வேண்டிய படிகளைக் கூறுவார், இதை அடியொற்றி, சன்மார்க்கம் என்னும் ஞானச் சாகரத்தில் முகிழ்த்து தெளிவு என்னும் முத்து எடுப்பதே இந்தத் தொண்டகத்தின் நோக்கமாகும். பெருமான் சன்மார்க்க சங்கத்தை நிறுவி 150 ஆண்டுகள் ஆகியும் சன்மார்க்கத்தை முறையாகப் படிப்படியாகக் கற்காமல், மேலெழுந்த வாரியாக முன்னும் பின்னும் முரணாக அறிய முயன்று தெளிவுபெறாமல் திகைக்கும் நிலையை மாற்றி பெருமான் தத்துவக்கருத்துக்களை மட்டும் அரிச்சுவடு பாடத்தில் ஆரம்பித்து, அதாவது வேர்நிலை, முதல் நிலை, இடை நிலை, உயர் நிலை, மேனிலை என ஐந்து நிலைகளில் சன்மார்க்கக் கருத்துக்களைப் பகுத்து ஆய்ந்து அறிவதே இத்தொண்டகத்தின் நோக்கம் ஆகும்.

**செயல் வகை :**

1. இந்தத் தொண்டகம் சன்மார்க்க உலகின் உயிர்நாடி என்பதால், இது பொதுமக்களுக்காக என்பதைக் காட்டிலும் சன்மார்க்கத்திற்குள் வந்துவிட்ட சன்மார்க்க விழைவகத்தார்க்கு (பிற அமைப்புகளில் வழங்கப்படும் Inner Circle என்ற பிரிவினர்க்கு) உகந்தது என்பதே சாலும். பெருமான் இந்த நிலையினரை, சாலை சம்பந்திகள் என்பார்.

2. மேற்சொன்னவாறு, இந்த ஆய்வரங்கம் ஐந்து நிலைகளில் ஆயவேண்டியுள்ளதால், பெருமான்பால் ஆழ்ந்த பற்றும், சன்மார்க்கத்தை ஆழ அறிதல் வேண்டும், என்ற ஆர்வமும் எல்லையற்ற பொறுமையும் உள்ளவர்க்கே பயன் அளிப்பதாக அமையும்.

3. இந்த ஆய்வரங்கம் 5 துறைகளாகப் பிரிக்கப் படுகிறது. ஒவ்வொரு துறைக்கும் துறைத் தலைவர் (HOD) ஒருவர் அமைவார். ஒவ்வொரு துறையும் 5 இருக்கைகளாகப் (CHAIRS) பிரிக்கப்பட்டு ஒவ்வொரு இருக்கைக்கும் சான்றாளர்கள் (READERS) அமைந்து துறைக்குத் துணை நிற்க வேண்டும். ஆய்வரங்க வகுப்புகள், பேருரைகள் போன்றும் கேள்வி பதில் போன்றும் அமைதல் வேண்டும். கருத்துக்கள் மனதில் தங்க ஏதுவாக, அச்சிட்ட கைத்தாள்களோ (RESERCH PAPERS) அல்லது கணினித் திரையிலோ (COMPUTER PROJECTOR) மூலமாகவோ அமைக்கலாம். பின்னாளில் இவை, வள்ளலார் பெருநெறிப் பதிப்பகத்தின் மூலமாக நூல்களாக வெளியிடலாம். வள்ளலார் அருள்நெறி வலைத்தளத்தின் மூலமாகவும் அவ்வப்போது வெளியிடலாம்.

4. வள்ளலார் ஆய்வரங்கத்தின் 5 துறைகளாவன:

    1. இராமலிங்கர் வரலாற்றுத் துறை

        DEPARTMENT OF RAMALINGER HISTORY

2. திருவருட்பா வரலாற்றுத் துறை

DEPARTMENT OF THIRU ARUTPA HISTORY

3. இராமலிங்கர் தத்துவத் துறை

DEPARTMENT OF RAMALINGER PHILOSOPHY

4. சன்மார்க்க வாழ்வியல் துறை

DEPARTMENT OF PRACTICE OF SANMARGAM

5. சன்மார்க்க சார்பியல் துறை

DEPARTMENT OF ALLIED SUBJECTS OF SANMARGAM

ஐந்து துறைகளுக்கும் ஐந்து இருக்கைகள் வருமாறு

## (1) இராமலிங்கர் வரலாற்றுத் துறை :

துறைத் தலைவர்: தயவு

இத்துறையின் கீழ் இயங்கும் ஐந்து

இருக்கைகளாவன :

**இருக்கைகள்** (CHAIRS)

1.1 உறைவிடச் சான்றுகள்

1.2 அகச் சான்றுகள்

1.3 அணுக்கத் தொண்டர் குறிப்புகள்

1.4 நண்பர்கள் அரசு போன்ற மற்ற குறிப்புகள்

1.5 செவிவழிச் செய்திகள்

## (2) திரு அருட்பா வரலாற்றுத் துறை :

துறைத் தலைவர் : தயவு

இத்துறையின் கீழ் இயங்கும் ஐந்து இருக்கைகளாவன :

**இருக்கைகள்** (CHAIRS)

2.1 பெருமான் திருக்கைச் சாத்தியவைகள்

2.2 பெருமான் காலத்து வெளிவந்தவைகள்

2.3 அணுக்கத் தொண்டர் எழுதிவைத்தவை

2.4 பிறநூல்களில் வரும் குறிப்புகள்

2.5 பதிப்பாசிரியர்கள் குறிப்புகள்

## (3) இராமலிங்கர் தத்துவத் துறை :

துறைத் தலைவர்: தயவு

இத்துறையின் கீழ் இயங்கும் ஐந்து இருக்கைகளாவன:

**இருக்கைகள்** (CHAIRS)

3.1 இராமலிங்கர் இறை, மனிதன் பற்றிய கொள்கை

3.2 இராமலிங்கர்-ஒளிநெறி மற்றும் அறிவியல் கொள்கை

3.3 இராமலிங்கர் தயவு தரும் ஒளியுடல் கொள்கை

3.4 இராமலிங்கர் அண்டங்கள், உலகங்கள், உயிர்கள் பற்றியக் கொள்கை

3.5 அருட்பாவில் வரும் தத்துவ விளக்கங்கள்

இதன் விரிவு யாதெனில்:

3.1 இராமலிங்கர் இறை பற்றியக் கொள்கையைச் சிந்திக்கும்போது, கற்கால மனிதர்களின் இறைவன், வேதகால இறைவன், பழந்தமிழர் இறைக் கொள்கை, சமயக்குரவர்களின் இறைக்கொள்கை, வள்ளற் பெருமானின் இறைக்கொள்கை என்ற வரிசையில் சிந்திக்க வேண்டும்.

3.2 வள்ளலாருக்குமுன் ஒளிநெறி பற்றிய செய்தி, வள்ளலார் ஒளிநெறிபற்றி சிந்திப்பது, அதை அறிவியல் எவ்வாறு நோக்குகிறது என்று சிந்திக்க வேண்டும்.

3.3 உள்ளத்தில் எழும் தயவின் நெகிழ்ச்சி, முத்தேக சித்தியை அளிப்பது எவ்வாறு எனச் சிந்திக்க வேண்டும்.

3.4 வள்ளலாரின் அண்டங்கள், வெளிகள் பற்றிய விளக்கம், இந்த நில உலகத்தின் பஞ்சபூத விளக்கங்கள், உலகங்களில் உயிர் இருப்பு பற்றியக்கொள்கை ஆகியனச் சிந்திக்கப்பெறும்.

3.5 அருட்பாவில் வரும் தத்துவ விளக்கங்கள் : இந்தப் பிரிவில் சிந்திக்க வேண்டிய தலைப்புகள் வள்ளலார் பெருநெறி பதிப்பகம் வெளியிட்டுள்ளf “சன்மார்க்க பகுப்புமுறை” என்ற நூலில் காண்க. சன்மார்க்கத்தின் ஒட்டுமொத்த தத்துவக் கொள்கைகளை, வேர்நிலை, முதல்நிலை, இடைநிலை, உயர்நிலை மற்றும் மேனிநிலை என 5 நிலைகளில் பிரித்து சிந்திக்கப்படுகிறது. சன்மார்க அன்பர்கள் தற்போது எந்த நிலையில் இருந்தாலும், தன்படிப்பை வேர்நிலையிலிருந்து துவங்கி பின்பு ஒவ்வொரு நிலையைக் கடக்கும் வேகம், அவர்களின் சன்மார்க்க அனுபவத்தை பொறுத்து அமையும். இந்தத் துறையில் பயிலுபவர்கள் மற்றத் துறையில் பயிலும்போதே, இதையும் ஒவ்வொரு நிலையாகக் கடந்து செல்லலாம்.

## (4) சன்மார்க்க வாழ்வியல் துறை :

துறைத் தலைவர்: தயவு

இத்துறையின் கீழ் இயங்கும் ஐந்து இருக்கைகளாவன:

**இருக்கைகள்** (CHAIRS)

4.1 இந்திரிய, கரண (புற, அக) ஒழுக்கங்கள்

4.2 உணவு ஒழுக்கங்கள்

4.3 சன்மார்க்க மூலிகைகள்

4.4. தினசரி சாதக வாழ்க்கை

4.5. தன்னிலை தியான தவ வாழ்க்கை

## (5) சன்மார்க்க சார்பியல் துறை :

துறைத் தலைவர்: தயவு

இத்துறையின் கீழ் இயங்கும் ஐந்து இருக்கைகளாவன:

**இருக்கைகள்** (CHAIRS)

5.1 சன்மார்க்கத்தில் உள்ள சமயக் குரவர்கள் தத்துவங்கள்

5.2 வள்ளலார் கண்ணோக்கில் திருமந்திரம், திருக்குறள்

5.3 சன்மார்க்கமும் பிற சமய மத ஒப்பீடும்

5.4 வள்ளலார் பதிப்பித்த பிறநூல்கள் - அதில் உள்ள ஒருமைப்பாடு

5.5 வள்ளலார் காலத்தது மற்ற அருளாளர்கள் மற்றும் அவர்கள் கொள்கைளக் ஒப்பீடு.

5. துறைத்தலைவர்கள் மற்றும் சான்றாளர்கள் தேர்வு பற்றி அறநிலையத்தாரோடு இணைந்து சிந்தித்து, பின்பு அந்தப் பெரியவர்களை அறநிலையத்தின் மூலமாக அணுக வேண்டும். அந்தப் பெருமக்கள் வந்து போகின்ற மற்றும் சிறப்புத் தொகையை அறநிலையம் மேற்கொள்ளும்.

6. இந்த ஆய்வரங்கத்தில் இணைந்து பயில விழையும் சன்மார்க்க அன்பர்களைத் தமிழகம் மற்றும் வெளியிடங்களிலிருந்து முன் கூட்டியே தெரிவு செய்து முடிவாக்க வேண்டும். அவர்கள் தங்கல் மற்றும் உணவுச் செலவுகளை அறநிலையம் மேற்கொள்ளும். ஆய்வரங்கத்தில் இணையும் சன்மார்க்க அன்பர்களுக்கு முன் பதிவு அவசியம். இந்த ஆய்வரங்கத்தின் பாடத்திட்டம் சில ஆண்டுகள் நிகழ வேண்டும் என்பதால், இடையறாத வருகையும் ஆர்வமும் வேண்டற்பாலது.

7. ஆய்வரங்க ‘ஆர்வலர்கள்’ மற்றும் துறைத் தலைவர் மற்றும் சான்றாளர்கள் ஆக மூவருக்கும் ஒத்த தேதியை முன்கூட்டியே முடிவு செய்து, முன் தகவல் பரிமாற்றம் செய்வது இத்தொண்டகத் தாளாளர் பொறுப்பு ஆகும்.

8. ஒவ்வோராண்டும் ஏப்ரல் மாதம் முதல் மார்ச் மாதம் வரையிலான கால அளவிற்கு வேண்டிய திட்ட வரையரையை செய்து, அறநிலையச் செயலர் அல்லது இணைச் செயலர் மூலமாகத் தலைவர் அனுமதி பெற்று திட்டங்களுக்குச் செயலுருவம் கொடுக்க வேண்டும்.

9. அறநிலையத்தில் மூன்று மாதத்திற்கு ஒருமுறை நிகழும் தாளாளர் கலந்தாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு தொண்டகம் சிறக்கத் துணை நிற்க வேண்டும்.

# 15 - வள்ளலார் வாழ்வியல் வலைத்தளம்

**நோக்கம் :**

இன்று அறிவியலின் அசுர வளர்ச்சியின் காரணமாக, தொலைதொடர்புகள் பல்கிப்பெருகி, உலகமே ஒரு சிறு கிராமமாகக் குறுகி நிற்கிறது. உலகின் ஒரு கோடியில் ஒருவர் சிந்திக்கும் கருத்து, அருத்த வினாடி உலகின் அடுத்தக் கோடிக்கு எட்டும் அளவிற்கு செய்தி பரவல் (Communication) பிரமிப்பாக வளர்ந்து இருக்கிறது. உலகியல் பற்றிய எந்தத்தேடலையும், கணினியின் சுண்டெலி (MOUSE) யின் மேல் ஒரு தட்டு தட்டினால், நம் கண் எதிரே அந்தச் செய்தி, கணினித் திரையில் விரிந்து நிற்கிறது. இணையமும் வலைத்தளமும் அதிசயத்தின் மறுபெயர்களாகி விட்டன. இந்த வாய்ப்பை பயன்படுத்ததி, நம் தாய் திருநாட்டின் ஞானக் கருத்துக்களை, "ஒரே உலகம் ஒரே உயிர்" என்ற சன்மார்க்கக் கருதத்தை, உலகெங்கும் கொண்டுச் சேர்க்க முயலுவதே, இத்தொண்டகத்தின் நோக்கமாகும்.

**செயல் வகை :**

1. உலகெங்கும் உள்ள சன்மார்க்கம் சம்பந்தமான அத்துணை வலைத்தளங்களையும் பட்டியலிட்டு அவைகளோடு அறநிலையம் தொடர்புகொள்ள வழிசெய்தல்.

2. பெண்ணாடம் வள்ளலார் அறநிலையத்தின் வலைத்தளத்தை இன்னும் மெருகேற்றி பல்லாரும் விரும்பி நோக்குமாப் போலப் புதுக்குதல்.

3. வள்ளலார் பெருநெறிப் பதிப்பகத்தோடு இணைந்து பெண்ணாடம் வள்ளலார் அறநிலையத்திற்கென ஒரு சஞ்சிகை (e – Magazine) ஒன்றை வடிவமைத்து, பெருநெறிப் பதிப்பகம் திரட்டி அளிக்கும் செய்தித் தொகுப்பை வண்ண வடிவில் காலாண்டுதோறும் வெளியிடல்.

4. மேற்படி, சஞ்சிகையை அனுப்புவதற்கு ஏதுவாக, உலகெங்கும் உள்ளோரின் மின்னஞ்சல் (e – mail) முகவரிகளை திரட்டி அதற்கான ஒரு குழுமம் உருவாக்கி அவர்களுக்கு அனுப்புதல். இதற்கு, வள்ளலார் பன்னாட்டு முனையத்தின் தாளளர்களின் துணையைக் கொள்ளலாம்.

5. இந்த வலைத்தளம், ஒரு அறிவு மேடையாகச், சிந்தனைக் கூடமாக அமையலாம், விரைவுக்கதியில் ஓடிக்கொண்டு இருக்கும் இன்றைய மனிதர்களுக்கு, மதசமய சன்மார்க்கத் தத்துவங்கள் ஒரு அவசர மற்ற - அவசியம் இல்லாத கருத்துக்களாகத் தோன்றலாம். அவர்களின் உடனடிக் தேவை : “ என் உடல் நலத்தை எவ்வாறு பேணுவேன் ? மன அழுத்தத்தை எவ்வாறு குறைப்பேன் ? பணியில் கவனச் சிதறலை எவ்வாறு தவிர்ப்பேன்? மன அமைதியை மகிழ்ச்சியை எவ்வாறு அடைவேன்?” போன்ற கருத்துக்களை அறிவியல் ஆன்மீக அடிப்படையில் சிந்திக்க, ஒரு கேள்வி-பதில் விவாத தளத்தை அமைத்து சிந்தனையைத் தூண்டலாம்.

6. இத்தொண்டகம் மேலும் விரிவடைய அதற்கான செயல் திட்டங்களை உருவாக்கி செயலர் / இணைச் செயலர் மூலம் தலைவர் அனுமதி பெற்று செயல் உருவம் கொடுத்தல்.

7. அறநிலையத்தில் மூன்று மாதத்திற்கு ஒருமுறை நிகழும் தாளாளர் கலந்தாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு தொண்டகம் சிறக்க வைத்தல்.

# 16 - வள்ளலார் மக்கள் தொடர்பகம்

**நோக்கம்** : பொது ஜனத் தொடர்பு வளர்த்துக் கொள்ளாத எந்த அமைப்பும் வெற்றி பெற்றதாக வரலாறு இல்லை. இதைக் கருத்தில் வாங்கி, வள்ளலார் அறநிலையத்திற்குப் பொதுமக்களோடு உள்ள தொடர்பை, மேலும் வளர்ப்பதே இத்தொண்டகத்தின் நோக்கமாகும்.

**செயல் முறை :**

1. இன, மத, மொழி, பால் என்ற எந்த வேறுபாடும் இல்லாமல் பொதுமக்கள் அறநிலையம் அணைந்துவர வழிவகுக்க வேண்டி, பல நிகழ்வுகளை அறநிலையத்தில் நிகழ்த்த வேண்டும். எடுத்துக்காட்டாக, மற்ற சமுதாய அமைப்புகளோடு இணைந்து ஆண்டிற்கு 5 (அ) 6 மருத்துவ முகாம்கள், இயற்கை நல்வாழ்வு பயிற்சிகள், யோகா, தியான வகுப்புகள் போன்றன நிகழ்த்தி, பொது மக்கள் கலந்து கொள்ள வழிகோல வேண்டும்.

2. வள்ளலார் மகளிர் மன்றம், வள்ளலார் மூலிகை முற்றம் மற்றும் வள்ளலார் இளைஞர் இன்குழாம் ஆகிய தொண்டகங்களோடு இணைந்து பலநிகழ்வுகளை நடத்தி பொதுமக்கள் அறநிலையவளாகம் வர வழி கோல வேண்டும்.

3. சன்மார்க்கக் கருத்துகளுக்குப் புறம்போகாமல், பல மதத்தினர் அல்லது அமைப்புகள் அதாவது, வேதாத்திரி மகரிஷியின் கருத்துக்கள், வாழுங்கலை கூட்டங்கள், மற்ற அருளாளர் அமைப்புக் கூட்டங்கள், சைவ வைணவக் கூட்டங்கள் ஆகியவற்றை அறநிலையத்தாரின் கலந்தாலோசனையில் அறநிலையத்தில் நிகழ்த்தலாம்.

4. ஒவ்வோராண்டும் ஏப்ரல் முதல் மார்ச் வரையிலான கால அளவிற்குண்டான திட்டங்களைத் தீட்டி, செயலர் / இணைச் செயலர் மூலமாகத் தலைவர் அனுமதிபெற்று செயலுருவம் கொடுத்தல்.

5. அறநிலையத்தில் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நிகழும் தாளாளர் கலந்தாய்வுக் கூட்டத்தில் கலந்து தொண்டகம் சிறக்க வழி கோலுதல்.

# 17 - வள்ளலார் செந்தமிழ் சங்கம்

**நோக்கம் :** சமஸ்கிருதம்தான் அகிலத்தின் தாய்மொழி என்ற பேச்சு வந்த போது, ‘தமிழ் நம் தந்தை மொழி’ என்றார் பெருமான். உலக மொழிகளிலேயே மிகப் பழமையானதும் வளமானதும் தமிழ்தான் என்று வெளிநாட்டவர் ஒப்புக் கொண்டாலும், இன்னும் இந்தியர்கள் ஒப்ப மறுக்கும் வியப்பையும், அந்தப் புரிதலே இல்லாத தமிழர் வாளா இருக்கிற வேதனையையும் அகற்ற முயற்சிப்பதே இத் தொண்டகத்தின் நோக்கமாகும்.

**செயல் முறை :**

1. இன்று கல்விச் சாலைகளிலே தமிழில்லை – ஆங்கிலம்தான் இருக்கிறது. இசை மேடைகளிலே தமிழில்லை – தெலுங்கோ அன்றி கன்னடமோதான் இருக்கிறது. ஆலயங்களிலே தமிழில்லை – சமஸ்கிருதம்தான் இருக்கிறது. தமிழர் பேச்சு மொழியில் தமிழில்லை – ஆங்கிலக் கலப்போ அன்றி வடமொழிக் கலப்போதான் அதிகம் இருக்கிறது. அப்படியாயின், தமிழே, நீ எங்கு வாழ்கிறாய்? இந்த ஆதங்கத்திற்கு மருந்தாக, கீழ்வருவனவற்றைச் செயல்படுத்தலாம்.

(அ) இசை நிகழ்ச்சிகள் நிகழ்த்தி அதில் தமிழிசையைக் குறிப்பாக அருட்பா அமிழ்தப் பாடல்களைப் பாடவைத்தல்.

(ஆ) பல்லாண்டுகளுக்கு முன், பிஞ்சு வயதில் நெஞ்சில் பதியவைக்கப்பட்ட ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன் போன்ற ஒரு வரி நீதிப் பாடல்களை மீண்டும் பள்ளிகள் தோறும் வீடுகள் தோறும் இலவசமாக அச்சடித்து வழங்குதல் - அதை ஒப்புவிக்கும் அத்தனை குழந்தைகளுக்கும் போட்டி இன்றி பரிசுகள் வழங்குதல்.

(இ) குழந்தைகளுக்கு விடுகதை, தமிழப் பழமொழி, விளையாட்டு, அந்தாதிப்பாடல் விளையாட்டு போன்ற பழந்தமிழ் விளையாட்டு விழாக்களை நிகழ்த்திப் பரிசுகள் கொடுத்தல்.

(ஈ) தமிழருடைய வேதம் அதாவது திருமறை, திருக்குறளாகும். உலகமொழிகளிலேயே பைபிளுக்கு அடுத்த படியாக அதிகமான மொழியிலே மொழியாக்கம் செய்யப்பட்ட நூல் திருக்குறளாகும். வள்ளற்பெருமான் வடலூர்ப் பெருவெளியில் திருக்குறளுக்கு வகுப்புகள் நடத்தினார்கள் என்றும், ‘தேவர் குறளிலே சாகாக்கலை தெரிவிக்கப்பட்டிருக்கிறது’ என்றும் பெருமான் கூறியதையும் நினைவில் கொள்ள வேண்டும். எனவே, திருக்குறளை வீடுகள் தோறும், பள்ளி கல்லூரிகள் தோறும் கொண்டு சேர்க்கும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

- பள்ளிகள் தோறும் திருக்குறளை ஒவ்வொரு வகுப்பிலும் எழுதிவைக்கத் தூண்டலாம். அல்லது திருக்குறள் மின்னியல் பதாகைகளை (பேனர்கள்) பள்ளி வளாகத்தில் வைக்குமாறு வழங்கலாம்.

- சிறிய அளவில் திருக்குறள் ஒன்றைப் பொருளோடு எழுதி அளித்து, அதை ஒவ்வொரு வீட்டு முகப்பிலும் வைக்குமாறு வேண்டலாம்.

- பேருந்து நிலையம் போன்ற 2 (அ) 3 இடங்களில், நிரந்தரமாக ஒரு பதாகை வைத்து, அதில் வாரம் ஒரு முறை மாற்றுவது போல் 2 (அ) 3 திருக்குறள்களைப் பொருளோடு மாட்டலாம். ஊராட்சியார் உதவியை இதற்காக நாடலாம்.

- திருமண அழைப்பிதழ்களில் தவறாது மனைமாட்சி அதிகாரப் பாடலொன்றை குறிக்குமாறு வேண்டலாம். அவ்வாறு அழைப்பிதழ் அச்சிடுவோர்க்கு, அறநிலையம் பாராட்டுக் கடிதம் எழுதலாம்.

- பள்ளி கல்லூரிகளுக்கு திருக்குறள் போட்டி நிகழ்த்தலாம்.

- எண்ம / பதின்ம கவனகர் யாராவது ஒருவர் நிகழ்ச்சியை பள்ளி / கல்லூரிகளில் நிகழ்த்தலாம்.

- பள்ளிகளில் திருக்குறளை இசையோடு பாடப் பயிற்றுவிக்கலாம்.

(உ) பள்ளி / கல்லூரிப் பிள்ளைகளுக்கு, பிறமொழிக் கலப்பில்லாத தனித் தமிழ்ப் பயிற்சி கொடுத்து, கலப்பிலாத் தமிழில் 10 (அ) 15 மணித்துளிகள் உரையாடுவோருக்கு (சொற்பொழிவு செய்வோருக்கு அல்ல) பரிசுகள் அளித்து ஊக்குவிக்கலாம்.

(ஊ) தனித்தமிழ் இதழ்களை அறிமுகம் செய்யலாம்.

(எ) சைவ வைணவப் பெருமக்களை அணுகி, ஆலய வழிபாட்டில் தேவார திவ்யப் பிரபந்தப் பாடல்களைப்பாடி வழிபாடு செய்ய வேண்டலாம்.

(ஏ) குழந்தைகளுக்குத் தமிழில் பெயர்வைக்க ஊக்குவிக்கலாம். தூய தமிழ்ப் பெயர் உள்ளோர்களுக்குச் சிறப்பு செய்யலாம்.

(ஐ) தொலைக்காட்சி ஊடகங்களைத் தொடர்பு கொண்டு, பிறமொழிக் கலப்பில்லாமல் ஒளிபரப்ப வேண்டுகோள் விடுக்கலாம். அவர்கள் ஒளிபரப்புச் செய்த ஒரு நிகழ்ச்சியை,

முழுவதுமாகப் பதிவு செய்து, அதைப் பிறமொழிக் கலப்பில்லாமல் மாற்றி ஒரு மாதிரியாக அவர்களுக்கு அனுப்பி அவ்வாறு ஒளிபரப்பச் செய்ய அவர்கள் தாள் வணங்கலாம்.

(ஒ) ஒரு சில தமிழ் நிகழ்ச்சிகளுக்கு, ஆடவர்களும் பெண்டிரும் குழந்தைகளும் தமிழர் மரபு ஆடைகளை உடுத்திவர வேண்டலாம்.

2. "கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப்போக" என்றார் நம் பெருமான். சடங்குகள் இல்லாத பழந்தமிழர் வழிபாட்டு முறையான தமிழ்ச் சித்தர்கள் வழிபாட்டு முறையாகிய "உள் கட" என்ற "கட உள்" என்ற உள்முகத் தியான முறையை மீண்டும் வலியுறுத்த வேண்டும். இதையே, பெருமான் "சிற்சபா நாட்டம்" என்றார்கள்; "தன்னை அறிந்து இன்பமுற வெண்ணிலாவே, ஒரு தந்திரம் நீ சொல்லாயோ வெண்ணிலாவே" என்றார்கள். இந்தத் தமிழர் மதத்தை மக்களிடையே கொண்டு செல்ல வேண்டும்.

3. "எல்லா உயிர்க்கும் பிறப்பு ஒக்கும்" என்ற வள்ளுவத்தையும் "யாதும் ஊரே, யாவரும் கேளிர் (உறவினர்)" என்ற தமிழ் மாண்பையும் பரப்ப வேண்டும். இதுதான் சன்மார்க்கச் சாரமாகும்.

4. கடந்த 26 ஆண்டுகளாக, வள்ளலார் அறநிலையம் தம் எழுத்து, பேச்சு நிகழ்வு அனைத்திலும் தூயத் தமிழையே பயன்படுத்தி வந்து இருக்கிறது. இதை, இத்தொண்டகம் மேலெடுத்துச் செல்ல வேண்டும்.

5. ஒவ்வோராண்டும் ஏப்ரல் மாதம் முதல் மார்ச் மாதம் வரையிலான கால எல்லைக்கு உண்டான திட்ட அறிக்கையை உருவாக்கி, செயலர் / இணைச் செயலர் மூலம் தலைவர் அனுமதியுடன் அவைகளுக்குச் செயலுருவம் அளித்திடல் வேண்டும்.

6. அறநிலையத்தில் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நிகழும் தாளாளர்கள் கலந்தாய்வு கூட்டத்தில் கலந்து கொண்டு தொண்டகம் சிறக்க வழிவகுக்க வேண்டும்.

# 18 - வள்ளலார் மென்கலை மன்றம்

**நோக்கம் :** “நன்மார்க்கர் நாவில் நவிற்றியப் பாட்டே, சன்மார்க்க சங்கம் தழுவியப் பாட்டே” என்பார் பெருமான். இறைவனை இசையால் வழுத்தி, அவனது ஆனந்த நடனத்தில் தன்னை மறந்தவர்கள் நம்மவர்கள். அதன் பொருட்டுதான், தீந்தமிழ்க் கீர்த்தனைகளை பெருமான் அளித்துள்ளார்கள். அந்த கீர்த்தனைகளை இசையோடு பாடப் பயிற்சி அளிக்கவும் இசையின் மூலமாக உயிர் இரக்கத்தை தூண்டி ஆன்ம நெகிழ்ச்சி உண்டாக்க வழி வகை செய்வதும் இத்தொண்டகத்தின் நோக்கமாகும்.

**செயல் வகை :**

1. இளஞ்சிறார்களுக்கும் மற்றவர்களுக்கும் எளிய இசையை தக்கப் பயிற்றுனர்கள் மூலம் பயிற்றுவிக்க வழிகோல வேண்டும்.

2. ஆண்டிற்கு ஒரு முறையாவது இயல் இசை நாடகம் மூலம் அருட்பாவை அறநிலைய அருள் அம்பல மேடையில் அறங்கேற்ற வேண்டும்.

3. உயிர் இரக்கத்தை ஊனிலும் உயிரிலும் உறையவைப்பது போன்று, பள்ளி கல்லூரி மாணவர்கள் மூலம், இயல், இசை நாட்டியங்களை நிகழ்த்தி, உயிர் இரக்க நெகிழ்ச்சியை உண்டாக்கலாம்.

4. ஒரு ஆண்டிற்கான செயல் திட்டத்தை உருவாக்கி அதை செயலர்/ இணைச் செயலர் மூலம் தலைவர் அனுமதியுடன் செயல்வடிவம் கொடுக்கலாம்.

5. அறநிலையத்தில் மூன்று மாதத்திற்கு ஒருமுறை நிகழும் தாளாளர்கள் கலந்தாய்வு கூட்டத்தில் கலந்து கொண்டு தொண்டகம் சிறக்க வழிவகை செய்தல் வேண்டும்.



# 19 - வள்ளலார் மகளிர் மாடம்

**நோக்கம்** : பெண்களுக்குப் பொது வாழ்விலும் ஆன்மீக வாழ்விலும் முழு பங்களிப்பு கொடுக்கச் சொல்லி, பெண் உரிமையை வலியுறுத்தியவர் பெருமான். பெண்கள் ஆன்மீக வாழ்விற்கு முழுமையாய் வந்தால், அவர்கள் மற்ற அனைவரின் அருள்ஞான வாழ்விற்கும் துணையாய் இருப்பார்கள் என்பார் பெருமான். எனவே, ஞான வாழ்விற்கும் சமுதாய நலப்பணிகளுக்கும் பெண்களை முழுமையாக ஈடுபடத் தூண்டுவதே இத்தொண்டகத்தின் நோக்கமாகும்.

**செயல் வகை :**

1. பெண்கள் அதிக அளவில் சன்மார்க்கத்தில் பங்கேற்கும் வகையில், முதற்படியாக மகளிர் மூலமாக, ஒவ்வொரு பூச நாளன்றோ அன்றி பூசத்தின் முதல் நாள் அதாவது புனர்பூச நாளன்று மாலையோ, அறநிலையத்தில் திருவிளக்கு வழிபாடு நிகழ்த்தலாம். அதற்குண்டான எளிய செலவினங்களை அறநிலையமே மேற்கொள்ளலாம்.

2. ஒவ்வொரு பூச நன்னாளும் வீட்டு வாசலில் தண்ணீர் தெளித்து, திருவிளக்கு ஏற்றிவைக்க இல்லத்தரசிகளை வேண்டலாம்.

3. வள்ளலார் தொழிற்பயிற்சி மையத்தின் மூலம் பெண்களுக்கு பலவிதமான முன்னேற்றப் பாதைகளைக் காட்டலாம்.

4. அறநிலையத்தில் நிகழும் எல்லா முக்கிய நிகழ்ச்சிகளின் போது, மகளிர் பங்குபெறும் வண்ணம், நிகழ்ச்சிகளை வடிவமைக்கலாம்.

5. அரசின் பெண்கள் சுயஉதவிக்குழு போன்றவற்றை அறநிலைய வளாகத்தில் நிகழ்த்தலாம்.

6. இன்று நாடுமுழுவதும் பெண்களுக்கான பல அமைப்புகள் உள்ளன. அவைகள், பெண் உரிமைக்காகவும்,பெண் முன்னேற்றத்திற்காகவும், பாடுபடுகின்றன. அவைகளோடு தொடர்புக் கொண்டு நமக்கு ஒத்துப்போகிற செயல்பாடுகளை நாம் மேற்கொள்ளலாம்.

7. பெண்கள் பள்ளிகளைத் தொடர்புகொண்டு பெண் பிள்ளைகள் தன்னை பாதுகாத்துக் கொள்ளுதல் தொடர்பாக விழிப்புணர்வை உண்டாக்கலாம்.

8. உலகப் பெண்கள் தினத்தை ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடி, அன்று பெண்கள் கல்வி, பெண்சிசு போற்றல், பெண் உரிமை போன்ற விழிப்புணர்வு தூண்டும் நிகழ்ச்சிகளை அமைக்கலாம்.

9. மகளிர் மன்றத்திற்கான வளர்ச்சி வகைகளைத் திட்டமிட்டு அறநிலையச் செயலர் / இணைச் செயலர் மூலம் தலைவர் அனுமதியுடன் செயல் உருவம் கொடுக்கலாம்.

10. அறநிலையத்தில் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நிகழும் தாளாளர் கலந்தாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு தொண்டகம் சிறக்க வழிகோல வேண்டும்.



# 20 - வள்ளலார் இளைஞர் இன்குழாம்

**நோக்கம்** : எதிர்கால உலகம் என்றுமே இளைஞர்கள் கையில்தான் இருக்கிறது என்பதில் இரண்டாம் கருத்துக்கு இடமில்லை. முதியவர்களின் முதிர்ச்சியும் இளைஞர்களின் எழுச்சியும் எந்தஒரு நிறுவனத்திற்கும் இன்றியமையாதவை ஆகும். வளரும் நம் அறநிலையத்திற்கும், இளைஞர்களின் ஆற்றலும் பங்குப்பணியும் தேவை என்பதும் அவ்வாறு அறநிலையத்தோடு இணையும் இளைஞர்களின் வாழ்விலும் நன்னெறிகள் பதிக்கப்பட வேண்டும் என்பதுமே இத்தொண்டகத்தின் நோக்கமாகும்.

**செயல் முறை :**

1. பள்ளி, கல்லூரிகளில் படிக்கும் இளம்பிள்ளைகளை அறநிலையத்தார் துணையுடன், இளைஞர்களை இன்குழாமில் உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டும். முதற் கட்டமாக ஒரு 50 பிள்ளைகளையாவது சேர்ப்பிக்கலாம். கட்டணம் ஏதுமில்லை.

2. வ.இ.இ-ல் உறுப்பினராகும் அனைத்து இளைஞர்களுக்கும் ஒரு அடையாள பில்லை (சட்டைப்பையில் தொங்க விடுவதுபோல) வழங்கலாம். துவக்கத்தில் வண்ண அட்டையில் அச்சடித்து வழங்கலாம். பின்னாளில் உலோகத்தில் வடிவமைத்துக் கொடுக்கலாம்.

3. வ.இ.இ உறுப்பினர்கள் தன்னார்வலர்களாகப், பலவிதப் பணிகளில் ஈடுபடலாம். எடுத்துக்காட்டாக, அறநிலைய விழாக்கள் அனைத்திலும் ஆர்வலர்களாகப் பங்கு கொள்ளலாம்; ஞான நூலகத்தில் உள்ள இளைஞர் நூல்களைப் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு அறிமுகம் செய்யலாம். வள்ளலார் செந்தமிழ்ச் சங்கம் வெளியிடும் ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன் போன்ற நூல்களை இலவசமாக, ஆரம்பப் பள்ளிகளில் வினியோகிக்கலாம்; ‘பொது இடங்களில் மலம் கழிக்க வேண்டாம்’ போன்றதும் ‘வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்போம்’ போன்றதுமான வள்ளலார் பசுமைக் காப்பகத்தின் துண்டுப்பிரசுரங்களை வினியோகிக்கலாம்; இதுபோன்று அறநிலையத்தின் பல்வேறு தொண்டகங்களின் பணி பற்றிய செய்திகளை மக்களிடம் கொண்டு சேர்க்கும் தூதுவர்களாக (AMBASSADOR) பணியாற்றலாம்.

4. யோகா, தியானம் போன்ற எளிமையான பயிற்சிகளை மேற்கொள்ளலாம். இதைக் கண்ணுறும் பெற்றோர்கள், தத்தம் பிள்ளைகளும், இதுபோல நன்னெறியில் வர வேண்டும் என்ற எண்ணத்தில், வ.இ.இ-ல் தம் பிள்ளைகளைச் சேர்க்க வழி உண்டாகும்.

5. அறநிலையத்தில் நிகழும் விழாக்களில், வ.இ.இ உறுப்பினர்களுக்கு நற்சான்றிதழ் போன்றன கொடுத்து ஊக்குவிக்கலாம்.

6. ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் மார்ச் வரையிலான காலத்திற்கு தாம் ஆற்ற நினைக்கும் செயல்பாடுகளைத் திட்டமிட்டு, அறநிலையச் செயலர் / இணைச் செயலர் மூலம் தலைவர் அனுமதியுடன் செயலுருவம் கொடுக்கலாம்.

7. மூன்று மாதங்களுக்கு ஒருமுறை, அறநிலையத்தில் நிகழும் தாளாளர் கலந்தாய்வு கூட்டத்தில் கலந்து கொண்டு, தொண்டகம் சிறக்க வழிகோல வேண்டும்.



# 21 - வள்ளலார் பசுமைக் காப்பகம்

**நோக்கம்** : இயற்கையை இறைவனாகக் கண்டவர்கள் நம் முன்னோர்கள். இயற்கையைப் பலவாறாகப் போற்றுவார், நம் வள்ளற்பெருமான். இன்றைய பூமியை மாசுபடாமல் காப்பாற்றி, நம் எதிர்கால சந்ததியருக்குக் கொடுக்க வேண்டிய கடமையை வலியுறுத்துவதே, இத்தொண்டகத்தின் நோக்கமாகும்.

**செயல்வகை** :

1. நிலத்தை ஐந்துவகையாகப் பிரித்த பழந்தமிழர், **பாலை** என்ற பிரிவிற்கு பாலைவன நிலத்தைத் தமிழகத்தில் காட்ட இயலாமல் போனார்கள். ஆனால், இன்று தமிழகமே பாலைவனமாக மாறிவருகிறது. மழை வற்றிப் போய்விட்டது. இந்த அவலத்தைப் போக்க மரம் நடுவதை ஒரு தவமாகக் கொள்ள வேண்டும். ஆண்டிற்கு 10,000 மரக் கன்றுகளை நட்டு வளர்ப்பது என்ற இலக்கோடு துவங்கி, வீடுகள், பள்ளிகள், தொழிற்சாலைகள், ஊர்ப்பொதுவிடங்கள் எனப் பலவிடங்களிலும் மரங்கள் நட்டு, அவைகளை அந்தந்தப் பகுதியில் உள்ளவர்கள் மூலம் பேண வேண்டும்.

2. சாலையோரங்களிலும் பொது இடங்களிலும் மலம் கழிக்கும் பழக்கத்தை மாற்றி, ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு கழிவறை அமைக்க அரசு இயந்திரத்தோடு பாடுபட வேண்டும். விழிப்புணர்ச்சித் துண்டுப் பிரசுரங்களை வள்ளலார் இளைஞர் இன்குழாம் மற்றும் வள்ளலார் மகளிர் மாடம் மூலம் விநியோகிக்கலாம்.

3. வீதிகள்தோறும் குப்பைத் தொட்டிகளை வைத்து, அதில்மட்டுமே குப்பைகளைக் கொட்ட, இல்லத்தரசிகளை வேண்டலாம். ஊராட்சி மன்றத்தாரைத் தொட்டிகள் வைக்கவும் குப்பைகளை அகற்றவும் வேண்டலாம்.

4. விறகுகள் எரிப்பதைத் தவிர்த்து, எரிவாயுவை மட்டுமே பயன்படுத்த பொதுமக்களைத் தூண்டலாம்.

5. வீட்டினுள் தேவை இல்லாதபோது, தேவையற்ற மின் சாதனங்களை நிறுத்திவைக்கவும், இயன்ற இடங்களில் எல்லாம் சூரியக்கதிர் மின்சாதனத்தைப் பயன்படுத்தவும் LED என்னும் குறைமின் ஒளியங்களைப் பயன்படுத்தவும் அறிவுரை கூறலாம். இவை புவி வெப்ப மயமாவதைத் தடுக்க உதவும்.

6. வேளாண்மையில் இயன்றவரை, அங்கக உரங்களான சாணம், இலை, தழை, பிண்ணாக்கு, குறிப்பாக வேப்பம் பிண்ணாக்கு போன்றவற்றை அதிகமாகப் பயன்படுத்தத் தூண்டி மண்வளத்தையும் நீர் வளத்தையும் காப்பாற்றலாம். உயிர்க்கொல்லிகளை குறைத்து பஞ்சகௌவியம் போன்ற அங்ககப் பூச்சி மருந்துகளை பயன்படுத்தப் பழக்கலாம். இதற்கான ஆலோசனைகளைக் கூற, இயற்கை வேளாண் அறிவியலார்கள் தமிழகத்தில் உள்ளார்கள். அவர்கள் மூலம் பயிற்சிக் கூட்டங்களை ஏற்பாடு செய்யலாம்.

7. இயன்றவரை நெகிழி (பிளாஸ்டிக்) களைக் குறைத்துக் கொள்ள விளம்பரம் செய்ய வேண்டும். மாற்றாக தாட்பைகள், சணற்பைகள். நூற்பைகள் போன்றவற்றை பயன்படுத்தத் தூண்டலாம். மறுசுழற்சிக்கு ஏதுவான பொருட்களையே பயன்படுத்தத் தூண்ட வேண்டும்.

8. இன்று நிலத்தடி நீர் வெகு விரைவாக குறைந்தது வருகிறது. காடுகள் குறைந்து மழைவளம் குறைந்து வருவதும் இதற்கு ஒரு காரணம். புவி வெப்பமயமாகி வருவதால் நீர் ஆவியாதலும் இதற்கு ஒரு காரணம். எனவே, இருக்கிற நீரை சிக்கனமாகப் பயன்படுத்துதல் இன்றியமையாததாகிறது. இதற்கு, கீழ்கண்ட வழிமுறைகளை பரிந்துரைக்கலாம்.

(அ) மழைக்காலங்களில் மழைநீர் வீணேச் சென்று கடலில் கலக்க விடாமல், மழைநீரை குளம், குட்டை , ஏரிகளில் சேமிக்க வழிவகை செய்யலாம்.

(ஆ) ஒவ்வொரு வீட்டின் கூரை நீரை குழாய்கள் மூலம் கொண்டுவந்து, மண்ணில் பள்ளம் இட்டு அதில் கூழாம் கற்கள் போன்றவற்றை நிரப்பி அதில் அந்த நீர் விழுவதுபோல் அமைத்தால், மழைநீர் மண்ணிற்குள் சென்று, நிலத்தடிநீர் ஆதாரம் பெருக ஏதுவாகும்.

(இ) தோட்டப் பயிர், கரும்பு, மரஞ்செடி வகைகளுக்கு இயன்ற வரையில் சொட்டுநீர் பாசனத்தை அறிமுகம் செய்யலாம்.

(ஈ) மண்ணில் அங்கத்தன்மை குறைவதாலேதான், மண்ணின் நீர்ப்பிடித்தன்மை (Water Holding Capacity) குறைகிறது. எனவே, சாண எரு, சர்க்கரை ஆலை அழுக்கு, பச்சைத்தழை, கரும்புச் சருகு, போன்றவற்றை ஆண்டுதோறும் மண்ணோடு சேர்க்க வேண்டும். இந்த ஒரு செயல்தான், மண்ணின் உயிர் தன்மையை நீட்டிக்க உதவும்.

இராசாயின உரங்களும் பூச்சிக்கொல்லிகளும் மண்ணின் உயிர்ப்புத்தன்மையை சிறிது, சிறிதாகக் குறைப்பன என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

9. இந்த பூமி, மனிதனுக்கு மட்டுமே சொந்தம் இல்லை. புல்லுக்கும், புழுவுக்கும், பறவைக்கும், பாம்புக்கும், மீனுக்கும், மிருகத்துக்கும், எல்லா ஜீவராசிகளுக்கும் இங்கே வாழ உரிமை உண்டு. இதை உணர்ந்து எல்லா ஜீவராசிகளையும் போற்ற வேண்டும். இதைத்தான் பல்லுயிர்ப் பரவல் ( Bio Diversity) என்று உலக நாடுகள் போற்றுகின்றன. இதையே, "எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க" என்றார் வள்ளற்பெருமான்.

10. வையகப் பசுமையைக் காப்பாற்ற வேறு என்ன என்ன வழிகளைச் செய்யலாம் எனத் திட்டமிட்டு அத்திட்டங்களை ஏப்ரல் முதல் மார்ச் வரையிலான காலத்திற்கு அறுதியிட்டு, அவைகளை அறநிலையச் செயலர் / இணைச் செயலர் மூலம் தலைவர் அனுமதி பெற்று செயலுருவம் கொடுக்க வேண்டும்.

11. அறநிலையத்தில் மூன்று மாதத்திற்கு ஒருமுறை நிகழும் தாளாளர்கள் கலந்தாய்வு கூட்டத்தில் கலந்து கொண்டு தொண்டகம் சிறக்க வழிவகை செய்தல் வேண்டும்.





# 22 - வள்ளலார் மனிதவளச் சீராயம்

( HUMAN RESOURCE DEVALOPMENT)

**நோக்கம்** : இம்மை வாழ்விற்கும் மறுமை வாழ்விற்கும் மனித மனம்தான் இன்றியமையாத காரணியாய் இருக்கிறது. இந்த மனத்தைச் செம்மைப் படுத்தி, நாம் அன்றாட வாழ்வில் நம்முள் பொதிந்து கிடக்கும் ஆளுமைத் திறனைப் புரிந்து, அறிந்து அவற்றைச் செவ்விய வழியில் செலவிட்டு வாழ்வில் வெற்றிபெற முயலுவதே இத்தொண்டகத்தின் நோக்கமாகும். உலகில் உள்ள அனைத்து நிறுவனங்களும் அமைப்புகளும் மனிதவள மேம்பாட்டுத் துறையை முதன்மைத் துறையாகப் போற்றுவதும் கூட இதன் இன்றியமையாமையைக் கருதித்தான்.

**பணிச் செயல் வகை** :

1. இதன் செயல் வகைகளை நான்கு தரத்தாருக்கெனப் பிரிக்கலாம்.

(அ) அறநிலையத்தில் வதியும் குழந்தைகள் (ஆ) அறநிலைய முதியோர்களும், பணியாளர்களும் (இ) அறநிலைய அறங்காவலர்கள் (ஈ) வெளி மாணவ மாணவிகள்.

2. மேற்சொன்ன நான்கு பயனாளிகளுக்குத் தனித்தனியே தக்க வல்லுநர்களைக் கொண்டு மனிதவளப் பயிற்சி வகுப்புகள் / செயலரங்கங்கள் (WORK SHOP) நடத்தலாம். செலவினங்களை அறநிலையம் மேற்கொள்ளும்.

3. முதல் மூன்று பயனாளிகளுக்கெனத் தனியே கோப்புகள் பராமரித்து அவர்களுடைய மேம்பாட்டு நிலையைக் கண்காணிக்கலாம்.

4. அறநிலைய மாணவர்கள் மற்றும் முதியோர்கள் ஆகிய இரு தரப்பினருக்கும் ஆண்டிற்கு இருமுறையாவது தக்க வல்லுநர்கள் மூலம் கருத்தறி ஆய்வு (COUNCILING) செய்ய வேண்டும்.

5. வெளிப் பள்ளிகளில் படிக்கும் 10ஆம் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு, ஆண்டிற்கு ஒருமுறையாவது 'ஆளுமை ஊக்கப் பயிற்சி' முகாம்களை அறநிலைய வளாகத்தில் நிகழ்த்தலாம்.

6. மேற்படி மாணவர்கள், தேர்வில் அச்சமின்றி எழுதிட, அவர்களுக்குத் தன்னம்பிக்கை செயலரங்கங்கள் (WORK SHOP) நிகழ்த்தலாம்.

7. மனிதவளச் சீராயம் தொடர்பான நூல்களை வள்ளலார் ஞான நூலகத்திற்கு அவ்வப்போது பரிந்துரைக்கலாம்.

8. மனிதவளச் சீராயம் தொடர்பான ஒளிக்காட்சிகளை அறநிலையத்தில் அவ்வப்போது வெளியிடலாம்.

9. ஒவ்வோராண்டும் ஏப்ரல் மாதம் முதல் மார்ச் வரையிலான கால எல்லைக்கு உண்டான திட்டங்களை வரையறை செய்து அறநிலையச் செயலர்/இணைச் செயலர் மூலமாகத் தலைவர் அனுமதி பெற்று செயலுருவம் கொடுக்க வேண்டும்.

10. அறநிலையத்தில் மூன்று மாதத்திற்கு ஒருமுறை நிகழும் தாளாளர்கள் கலந்தாய்வுக் கூட்டத்தில் கலந்துகொண்டு தொண்டகம் சிறக்க வழிகோல வேண்டும்.

# 23 - வள்ளலார் திருநாள் திருசபை

**நோக்கம்** : வள்ளலார் அறநிலையம் வள்ளற்பெருமான் திருவடியைப் போற்றி பணிசெய்துவரும் நிறுவனமாகும். எனவே, இந்த நிறுவனம் பெருமானின் திருநாட்களை போற்றுதல் வேண்டும் என்பதையும் அந்நாட்களில் பெருமான் கருத்துக்களை உள் வாங்குதல் வேண்டும் என்பதும் இத் தொண்டகத்தின் நோக்கமாகும்.

**செயல் முறை :**

1. வள்ளலார் அறநிலையத்ததில் கீழ்வரும் விழாக்களை ஏற்பாடு செய்தல் வேணடும்.

1..1. மாத பூச விழா (தைப்பூச விழாவையும் சேர்த்து)

1.2. பெருமான் வருவிக்க உற்ற நாள் விழா.

1.3. தருமச்சாலை துவக்க நாள் விழா.

1.4. கொடி நாள் விழா.

1.5. அகவல் நாள் விழா.

1.6. அற நிலைய ஆண்டு விழா.

2. அறநிலையத்தில் செயல்பட்டு வரும் பலத்தொண்டகங்களின் துணையோடு, குறிப்பாக வள்ளலார் கருணைச்சோலை, வள்ளலார் பிரச்சாரப் பேரவை, வள்ளலார் மக்கள் தொடர்பகம், வள்ளலார் மென்கலை மன்றம், வள்ளலார் இளைஞர்குழாம், வள்ளலார் மகளிர் மாடம் போன்றவற்றின் துணையோடு விழா சிறக்க வழிகோலலாம்.

3. ஒவ்வொரு விழாவிற்கும் முன் வாரமே அறநிலையத்தாரோடு முன் கூட்டியே சலந்து ஆலோசிக்கலாம்.

4. இத்தொண்டகத்தின் தாளாளர்கள் சிலர் உள்ளூரிலும் சிலர் வெளி ஊரிலும் வதியவர்களாக இருக்கிறார்கள் / இருப்பார்கள். எனவே, சுழற்சி முறையில் இத்தொண்டகத்தின் தாளாளர்கள் மேற்சொன்ன விழாக்களை ஏற்பாடு செய்தல் நலம். தேவையாதெனில், எக்காரணம் கொண்டும் விழாக்கள் தடைபடாமல் நிகழுமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

5. இத்தொண்டகத்தின் தாளாளர்கள் வள்ளற்பெருமானை முழுமையாக உள்வாங்க வேண்டும். இதற்காக இவர்கள் ஆண்டிற்கு ஒருமுறையாவது வடலூர்ப் பெருவெளி ஏகுதல் நலம்.

6. இத்தொண்டகத் தாளாளர்கள், வள்ளலார் சன்மார்க ஆய்வரங்கத்தில் பயிலுதல் அவர்களுக்கு மேலும் பெருமான்பால் தெளிவு உண்டாக்கும் என்பதால் இப்பயிலகத்தில் பயில வேண்டப்படுகிறார்கள். உயிர் இரக்கமும், தொண்டும் இருக்கண்களாக பாவிக்கும் உணர்வைப் பெறவேண்டும்.

7. ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் மார்ச் வரையிலான காலவரைக்கான செயல்திட்டங்களை பட்டியலிட்டு செயலர் / இணைச் செயலர் மூலம் தலைவர் அனுமதி பெற்று செயலுருவம் கொடுக்க வேண்டும்.

8. அறநிலையத்தில் மூன்று மாதத்திற்கு ஒருமுறை நிகழும் தாளாளர்கள் கலந்தாய்வுக் கூட்டத்தில் கலந்துகொண்டு தொண்டகம் சிறக்க வழிகோல வேண்டும்.

 

# 24 - வள்ளலார் பன்னாட்டு முனையம்

(Vallalar International Consortium)

**நோக்கம்** : குடத்தில் இட்ட விளக்காக, அறநிலையம் தன் இருபத்து ஐந்து ஆண்டுகளைக் கடந்து பொலிந்து நிற்கிறது. அதுபோல, வள்ளற் பெருமான் வழங்கிய சன்மார்க்கக் கருத்துக்களும் ஆழ்ந்த பற்றுதல் உடையார் மட்டுமே அறிந்ததாகக் குறுகிய வட்டத்தில் உள்ளது. இவையாவும் நாடுகள் கடந்து விரிய வேண்டும். நாடு, இனம், மொழி என்ற எல்லைகள் கடந்து, சன்மார்க்கம் என்னும் உலக சகோதரத்துவ உயிர் நேயம் வளர வழி செய்ய வேண்டும் என்பதே இத்தொண்டகத்தின் நோக்கமாகும். **பன்னாட்டாரிடம் நன்கொடை பெறுவது இதன் நோக்கமல்ல!** வேறுபாடற்ற உயிர் நேயத்தை உலகுக்குக் கொண்டு செல்வதே இதன் நோக்கமாகும்.

**பணி செயல் வகை :**

1. தாங்கள் சார்ந்துள்ள நாடு / பகுதியில் தங்களின் அறிதலில் உள்ள நண்பர்கள் குழாமின் மின்னஞ்சல்களை சேகரித்து, ஒரு குழுமம் ஏற்படுத்தலாம் துவக்கும் முகமாக, குறைந்தது 50 மின்னஞ்சல்களையாவது இக்குழுமத்தில் சேர்க்கலாம்.

2. வள்ளலார் வாழ்வியல் வலைதளத் தாளாளர் வள்ளலார் அறநிலையம் மற்றும் வள்ளற்பெருமான் பற்றிய செய்திகளை அவ்வப்போது அனுப்பி வைப்பார். அந்த மின்னஞ்சல்களை தம் நண்பர்கள் குழாம் மின்னஞ்சல்களுக்கு தாங்கள் அனுப்பி வைக்கலாம்.

3. வ வா வ தாளாளர் வள்ளலார் அறநிலையத்தின் மின்னியல் சஞ்சிகை ( e-MAGAZINE) யை அவ்வப்போது தங்களுக்கு அனுப்பி வைப்பார். அவைகளையும் தாங்கள் தங்கள் மின்னஞ்சல் குழாமிற்கு அனுப்பி வைக்கலாம்.

4. வள்ளலார் அறநிலைய வலைதளத்தில் ‘விவாத மேடைப்’ பகுதி ஒன்று உள்ளது. அதில் வள்ளற் பெருமான் உலக உயிர் நேயக் கொள்கை பற்றி விவாதிக்கலாம். அன்பர்கள் எழுப்பும் வினாக்களுக்குத் தக்க சன்மார்க்கச் சான்றோர்கள் மூலம் விளக்கம் அளிக்கப்படும்.

5. இந்த தொண்டகத்தின் செயல்பாடுகள் விரிவடையும் வேளையில், பன்னாட்டு கருத்தரங்கம் ஒன்றையும் கூட்டலாம். தொடக்கமாக, மாதத்தின் குறிப்பிட் சில நாட்களில் ஒலிஒளிக் காட்சி (VIDEO CONFERENCING) மூலம் உரையாடலாம். ‘SKYPE’ மூலமாகவும் உரையாடலாம்.

6. வ வா வ தாளாளர் தங்களுக்கு, வள்ளற்பெருமான் தொடர்பான நூற்றுக் கணக்கான வலைதள விபரங்களை தங்களுக்கு அளிப்பார். அவைகளை, தங்கள் மின்னஞ்சல் குழாமிற்கு அனுப்பி, பெருமானின் உலக உயிர் நேய ஒளிநெறிக் கருத்துக்கள் பரவ ஏது செய்யலாம்.

7. மேலும் வள்ளற் பெருமான் உயிர்நேயக் கருத்துக்கள், பன்னாட்டுப் பரவலுக்கு என்ன செய்யலாம் என்ற தங்கள் கருத்துக்களை அறநிலையத் தவைருக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பி விளக்கலாம். அவைகளை அறநிலையம் தாள் வணங்கி ஏற்றுக் கொள்ள அணியமாய் உள்ளது.

8. தாங்கள் தமிழகம் வரும்போது, ஒருமுறையாவது அறநிலையம் வளாகம் வந்து தங்கள் கருத்துக்களை அறநிலையத்தாரோடு கலந்தாய்வு செய்யலாம்.



# 25 - வள்ளலார் சாதுக்கள் குடில்

**நோக்கம்** : பிறந்து, வாழ்ந்து பின் இறுதியாக இறந்து போவது உலக உயிர்கள் அனைத்திற்கும் பொதுமையானது. ஆனால் மனிதன் மட்டும் தான் இந்த மூன்று நிகழ்வுகளில், இடைப்பட்டதான "வாழ்தல்" என்பதின் முழுப் பொருளையும் உணர்ந்து, ஒரு மேம்பட்ட வாழ்க்கையை பிற உயிர்களிடமிருந்து வேறுபட்டு வாழ மனம் என்னும் கருவியை செம்மை படுத்தும் வழி அறிந்தவனாகிறான். இன்னும் ஒரு நிலை மேலே போய், வாழுங்கலை அறிந்து, இறப்பையும் வெல்லும் திறத்தை திருமூலர், நால்வர்கள் ஆகியோர் அடியொற்றி வள்ளற்பெருமான் போன்றோர்கள் நமக்குக் காட்டி இருக்கிறார்கள். எனவே, மனிதனாகப் பிறந்த நாம், பிறந்து வாழ்ந்து இறத்தல் என்று உள்ள மற்ற உயிர்கள் போல் அல்லாமல், மேம்பட்ட அருள் வாழ்க்கை வாழ வழிகோலுவதே, வள்ளலார் சாதுக்கள் குடிலின் நோக்கம் ஆகும்.

**செயல் முறை :**

1. புறவாழ்வை "போதும்" என விடுத்து அக வாழ்விற்கு இனி "ஆவோம்" என வருவோரை இனம் கண்டு அவர்களை அறநிலையத்தாருக்கு பரிந்துரைக்கலாம்.

2. அறநிலையத்தின் வள்ளலார் பெருநெறிப் பதிப்பக வெளியீடான "பன்னீரகவை ஒழுக்க நெறி"யின் அடிப்படையில் வாழ்வோர் மாத்திரமே சாதுக்கள் குடிலுக்குள் வர தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

3. அத்தகுதியின் அடிப்படையில் சாதுக்களாக வருவோருக்கென, அறநிலையத்தில் சாதுக்குடில் அறைகள் அணியமாக உள்ளன.

4. சாதுக்கள் குடில் என்பது, புற வாழ்க்கையை வாழ இயலாமல் அறநிலையம் சரணடைவோர்க்கென உள்ள வள்ளலார் முதியோர் வாழ்வகம் போன்றதல்ல. வாழ இயலும் என்பாரும் அக வாழ்க்கை பால் ஈர்க்கப்பட்டு, புற வாழ்க்கையை விட்டு புளியம் பழமும் தோலும் போல வாழ அறநிலைய வளாகத்திலேயே தம் எஞ்சிய வாழ்நாளை அர்ப்பணிக்க வருவோருக்கே சாதுக்கள் குடில் பொறுத்தமாகும்.

5. துறவறம் என்பது, புறமாற்றத்தை காட்டிலும், அக மாற்றத்தை அதிகமாக காட்டவேண்டியதாகும், பெருமானை அகமும், புறமும் ஏற்று அந்த உணர்வின் நெகிழ்விலேயே வாழ்ந்து வரும் ஒருவர், தனக்கு விதிக்கப்பட்ட உலகியல் கடமைகளை ஆற்றியபின்னால், ஒட்டுமொத்த அக வளர்ச்சிக்காகப் பாடுபட வழிவகை செய்வதே சாதுக்குடில் ஆகும். சாதுக்குடில் என்பது ஓய்வுக்கால இருப்பகம் இல்லை. இது அகவாழ்வின் முதிர்வகம் ஆகும். இங்கு பேச்சை காட்டிலும் அக நெகிழ்வுதான் முக்கியமாகிறது. புலன் இச்சைகள் குறைந்து, அகஒளி நாட்டம் பெருகும் நிலை : உறக்கம் குறைந்து உயிர் இரக்கம் பெருகும் நிலை. பன்னீர் அகவை ஒழுக்கத்தின் அடிப்படையில் தன்னொழுக்கம் தலைசிறக்க, துணை வருவது தான் சாதுக்கள் குடில் என்பதை உணர்தல் வேண்டும்.

6. இத்தொண்டகத்தின் தாளாளர் மூன்று மாதத்திற்கு ஒருமுறை நிகழும் தாளாளர்கள் கலந்தாய்வில் கலந்து இத்தொண்டகம் சிறக்க வழிகோல வேண்டும்.



# 26 - வள்ளலார் சின்னம்மை சேவாலயம்

**நோக்கம்** : மாதராய்ப் பிறக்க மாதவம் செய்திட வேண்டுமம்மா என்று மொழிந்த மண், இந்தத் தமிழ் மண். ஆனால், இதே மண்ணில் பாவப் பிறவிகள் போலப் புறக்கணிக்கப்பட்ட பெண்களை, கைம்பெண் என்ற இழிவுச் சொல்லால் சுயமரியாதை மறுக்கப்பட்ட பெண்களை, தன்மானத்தோடு வாழ வழிவகை செய்வதே இத்தொண்டகத்தின் நோக்கமாகும்.

**செயல்வகை** :

1. உணவிற்கே வழியில்லை என்ற நிலையில் உள்ள, உழைக்கவல்ல நிலையில் உள்ள பெண்களை, சின்னம்மை சேவாலயத்திலும், உழைக்க இயலாத முதுமைப் பெண்களை வள்ளலார் முதியோர் வாழ்வகத்திலும் தங்கவைத்துப் பராமரித்தல்.

2. உழைக்க இயலும் சின்னம்மை சேவாலயப் பெண்களுக்கு உழைக்கத் தொழிற்பயிற்சி கொடுக்க வேண்டும். இப்பணியை வள்ளலார் மகளிர் மாடம் மூலமாகவோ அன்றி வள்ளலார் தொழிற்பயிற்சி மையம் மூலமாகவோ செய்யலாம். தம் வாழ்க்கைக்கு உண்டான வாழ்வாதாரத்தை அவர்களுக்குத் தத்தம் தொழில் மூலம் செய்து அளித்தல் வேண்டும்.

3. அவ்வாறு, வள்ளலார் சின்னம்மை சேவாலயத்தில் அடைக்கலம் ஆகுவோருக்கு, அறநிலையத்தில் தங்கி இலவச உணவுகொள்ள வழி செய்யலாம். அப்போது அவர்கள் பயிற்சிபெற்று உண்டாக்கும் பொருட்கள் அறநிலையத்தின் உடைமைகளாகக் கருதப்படும். அவைகளை வள்ளலார் வருவாய் வாரியத்தின் மூலமாக விற்று அறநிலையக் கணக்கில் வரவு வைக்கப்படும். அவ்வாறு பணிபுரியும் பெண்கள் கணக்கில் ஒரு எளிய சன்மானத் தொகை வரவு வைக்கலாம்.

4. மகளிர் சுய உதவிக் குழுக்களில் இப்பெண்களை இணைத்துத் தம் கைகளால் தாமே உழைத்து முன்னேற உதவ வேண்டும்.

5. இயன்றவரையில் சின்னம்மை சேவாலயப் பெண்களுக்கு சமுதாயப் பாதுகாப்பு அளிப்பதற்கான ஏதுக்களைச் செய்ய வேண்டும்.

6. ஒவ்வோராண்டும் ஏப்ரல் மாதம் முதல் மார்ச் வரையிலான காலத்திற்கு உண்டான செயல் திட்டங்களை அறநிலையச் செயலர் / இணைச்செயலாளர் மூலமாகத் தலைவர் அனுமதி பெற்று செயலுருவம் கொடுக்க வேண்டும்.

7. அறநிலையத்தில் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நிகழும் தாளாளர்கள் கலந்தாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு, தொண்டகம் சிறக்க வழிகோல வேண்டும்.



## 27 - வள்ளலார் மாற்றுத்திறனாளிகள் மகிழ்வகம்

**நோக்கம்** : வல்லூழின் விளைவால், இப்பிறவியில் சிலர் உடலில் ஊனத்தோடு பிறக்கின்றார்கள். அவ்வாறு பிறந்தவர்களை, மற்றவர்கள் அன்பினால் தழுவி அவர்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும். என்ற அடிப்படையில் மாற்றுத் திறனாளிகளைப் பராமரித்து அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதே இத்தொண்டகத்தின் நோக்கமாகும்.

**செயல் வகை** :

1. உடலிலோ அல்லது அறிவு வளர்ச்சியிலோ குறைபாடு உள்ளவர்களை, அறநிலையத்தார் மூலம் இந்த மகிழ்வகத்தில் சேர்த்துப் பராமரிக்க வேண்டும்.

2. அறிவியல் அடிப்படையில், மாற்றுத் திறனாளிகளின் தேவைகளை அறிந்து, அதற்கு ஏற்புடைய கருவிகள், பயிற்றுநர்கள் ஆகியவற்றை ஏற்பாடு செய்தல் வேண்டும்.

3. தொண்டு உள்ளம் கொண்ட அன்பர்களைப் பணியில் அமர்த்தி, முற்பிறப்பின் வினையால் வந்த உடல் உள்ளக் குறைகள் தெரியாவண்ணம், மாற்றுத் திறனாளிகளுக்கு ஒரு மாமருந்தாய், ஒரு தென்றலாய் இந்த மகிழ்வகம் விளங்க வேண்டும்.

4. அறநிலையத்தில் மூன்று மாதத்திற்கு ஒரு முறை நிகழும் தாளாளர்கள் கலந்தாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு, தொண்டகம் சிறக்க வழிகோல வேண்டும்.



# 28 - வள்ளலார் குழந்தைகள் குவலயம்

**நோக்கம்:** மனித இனம் தடைபடாமல் இருக்க இறைவன் அளிக்கும் வரம் குழந்தைகள். குழந்தையும் தெய்வமும் ஒன்று என்று கொண்டாடும் இவ்வுலகில், அந்தக் குழந்தைகளையே பாரம் என ஒதுக்குவோரும் இவ்வுலகில் உண்டு. அவ்வாறு புறக்கணிக்கப்படும் குழந்தைகளைக் கொண்டுவந்து, தாயும் தந்தையுமாய்ப் பேணி வளர்ப்பதையே நோக்கமாகக் கொண்டது இத்தொண்டகம்.

**செயல்வகை:**

1. எங்கெலாம் குழந்தைகள் புறக்கணிக்கப்படுகிறதோ அங்கெலாம் சென்று அக்குழந்தைகளை ஏந்தி வந்து பராமரிக்க வேண்டும்.

2. அவ்வாறு அடையாளம் காணப்படும் குழந்தைகளை அறநிலையத்தின் விதிகளுக்கு உட்பட்டு தெரிவு செய்து குழந்தைகள் குவலயத்தில் இணைக்க வேண்டும்.

3. குழந்தைகளைத் தாயெனப் பராமரிக்கும் இயல்பு படைத்த பெண்டிரை செவிலியராக அமர்த்தி குழந்தைகள் நலம் பேண வேண்டும்.

4. குழந்தைகள் பள்ளிச் செல்லும் வயது வந்தவுடன் அவர்களை, வள்ளலார் மாணவர் இல்லத்தில் சேர்த்துப் பின்பு அவர்கள் ஒரு பணியில் அமரும் வரை அவர்களுக்குக் கல்வி அளிக்க வேண்டும்.

5. பின்பு சமுதாயத்தில் தகுதி உள்ள ஒரு வரனைக் கொண்டு இல்லற வாழ்க்கைக்குத் தகுதியுடையவர்களாக்கவேண்டும்.

6. வள்ளற் பெருமான் திருவடி முன்னர் யாரும் அனாதை இல்லை என்ற உண்மையை உலகுக்கு உணர்த்த வேண்டும்.

7. வள்ளலார் குழந்தைகள் குவலயத்தின் தாளாளர், தாயும் தந்தையுமாய் இக் குழந்தைகளைப் பேணி, அறநிலையத்தின் இத் தலையாய பணி சிறக்க வழி கோல வேண்டும்.

8. அறநிலையத்தில் மூன்று மாதத்திற்கு ஒருமுறை நிகழும் தாளாளர்கள் கலந்தாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு தொண்டகம் சிறக்க உதவ வேண்டும்.

# வெள்ளிவிழாக் கண்டு
# பொன்விழவை நோக்கி பயணிக்கும்



# வள்ளலார் அறநிலையம்
## பெண்ணாடம்

அச்சிட்டோர் :

**ஸ்ரீ முருகன் மல்டி கலர் பிரிண்டிங்**
பெண்ணாடம்